ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்

என்னும்

# குசலவநாடகம்

இது

கூடலூர்தாலூகா செம்மங்குப்பம் சான்றோர்குலம்

ரா. சுப்பராயனடார் குமாரர்

எஸ். ஷண்முகம் உபாத்தியாயரால்

இயற்றியது.

பதிப்பாளர்:

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

காபிரைட்] 1956 [விலை அணா 12

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

## காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் அச்சுக்கூடத்ததிபர்களுக்கு தெரியப்படுத்துவது யாதெனில்:- ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர் தாலூகா செம்மங்குப்பம் சான்றோர்குலம் எஸ். ஷண்முகம் உபாத்தியாயர் அவர்களால் இயற்றிய இந்த ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் என்னும் குசலவ நாடகத்தை, அமரம்பேடு. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ் பூமகள்விலாச அச்சுக்கூடத் தலைவர்களில் ஒருவராகிய அ. முத்து வடிவேல் முதலியார் மேற்படி ஷண்முகம் உபாத்தியாயரிடம் சர்வ சுதந்தரத்துடன் கிரயத்திற்குப்பெற்று அச்சிட்டு தன்பேரால் காபிரைட் செய்து வெளியிட்டிருந்ததை, அடியிற்கண்ட நான் அச்சிட்டு மகாகனம் பொருந்திய கவர்ண்மெண்டார் அவர்கள் சட்டப்படி என் பேரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டு இருக்கிறேன். ஆகையால் இப்புத்தகத்தை என் அனுமதியின்றி யாரும் அச்சிடக் கூடாது என்பதை தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு

அ. இராஜரத்தின முதலியார்,
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

---

## சாற்றுக்கவி

[illegible] எகாட்டூர் வைத்திய என்ற பத்மநாபசுவாமிகளின்
சிரேஷ்ட மாணுக்கராகிய
கூடலூர்தாலூகா செம்மங்குப்பம் முருகேசநாடார் குமாரர்
வேதாந்த வித்வ ம-ா-ா-ஸ்ரீ,
மு. துரைசாமி நாடார் அவர்கள் இயற்றிய
அறுசீரடி யாசிரிய விருத்தம்

பார்படைக்க அயன்கார்க்க மாயன்கார்க்க
பாரழிக்க ஈசனினும் பலவான்தூயன்
கார்படைத்த மேனிகோ தண்டபாணி
கருணைகழல் கலர்மூன்றங் கலக்கப்பேணி
பேர்படைத்த சான்றோர் குலத்திலக
புரவலஷண் முகநாட னுளமலர்ந்த
ஏர்படைத்த முத்தமிழில் கமிழ்யிலங்கு
நாடகத்தமி ழிசைத்தான் மாதோ.

---

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்

### ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் என்னும்

# குசலவ நாடகம்

O-,892NS
N56

### விநாயகர் துதி வெண்பா

செம்பொருள் வாய்ச் செவிவழி செல்லுகின்ற
இம்பரி லெளியார்க் கெளியனு—யும்பர்க்கு
மும்பனு யோதுமறை யுள்ளொளியாய் நின்றிலங்குந்
தும்பிக்கை யான்றாட் டுணே.

### ஸ்ரீராமர் வருகிற விருத்தம்

திருவளர் அயோத்தி நகரில்வாசன்
தசரதர்க்கு சுதனுக வந்தசீலன்
பெருமையுள்ள சீதையா ளருகில்சூழ
பேர்பெருகும் மணிமுடி யலங்கரித்து
கருணையுள்ள தம்பிமார் நீதிகூற
கன்னியர்க ளிருபுரமும் கவரிவீச
அருந்தவ முனிவர்சித்தர் போற்றிதாழ
அகிலம்புகழ் இராமச்சந்திரர் வருகின்ருரே.

### ஸ்ரீராமர் தரு

அரக்கசம்மாரமூர்த்திவந்தார் இந்த
அகிலபுவனமும் பகவானிவரெனும்
அண்ணல்ஸ்ரீராமச் சந்திரர்வாரார்

வரம்பெற்றஇரணியனை நரசிம்மமாய்க்கிழித்தேன்
திரம்பெற்றபிரகலாதன் துயரத்தைமிகதீர்த்தேன்

சுருள் துடுக்குடன்மச்சவ தாரமேகொண்டு
முடுக்குள்ளசூரனை மடித்தேனேகண்டு அர

காதியின்மைந்தனேடுசென்றேன் முனிவன்
கோரியதவமதை மீறியேஅழித்த
கன்னிதாடகையாளை கொன்றேன்

ஆதியில்கெளதமர் அளித்தசாபத்தைபெற்ற
மாது அகலிகையின் மர்மம்வெளியில்தூற்ற

சுருள் மங்கையாளிட — சாபத்தைதீர்த்தேன்
துங்கபாசு — ராமனெனதிர்த்தேன் அர

சிற்றன்னைவாக்கியத்தைக்கொண்டு — நல்ல
சித்திரமரவுரி மெத்தவேதரித்து
சீதையுடன் பதினாலாண்டு

கற்பாறைகுன்றுகள் — கானகம்மிகசென்று
கடும்பசியாலேவாடி — கந்தமூலங்கள்தின்று

சுருள் கடுகியேசித்திர — பருவதத்தைபடுத்தேன்
முடுக்கியேஅரக்கி — மோகத்தைக்கெடுத்தேன் அர

அரக்கனுகியகும்பகர்னனைக்கொன்றேன் — தீர
அதிபலராவணன் பதிபுகழ்சேனை
எதிர்த்தமூலபலத்தை வென்றேன்

சிரங்கூப்பிவணங்கிய — சீலன்விபீஷணருக்கு

சுருள் சீர்பெறமகுடம் — பேர்பெறதரித்தேன்
பாரினில்கீர்த்தி — தீரனுயெடுத்தேன் அர

## ஸ்ரீராமர் கவி

வந்தனம்செய்துநின்ற வாசல்காப்பவனேகேளாய்
குந்தகம்நேர்ந்திடாமல் குவலயந்தன்னில்வாழ்வீர்
சிந்தையிலெண்ணங்கொண்டேன் தேவியாள்தனக்குரைக்க
சுந்திரமாதுதன்னை சீக்கிரம்கொண்டுவாராய்.

## சீதை வருகிற விருத்தம்

மாசில்லாசந்திரன்போல் மதிமிகவதனரூபி
ஆசையாய்நாதனவர் அழைத்திடும்சேதிகேட்டு
பாசமாய்சேடியோடு பலவிதபணிகள்பூண்டு
காசினியோர்புகழுஞ் சீதாங்கனிவருகின்றாளே.

## சீதை தரு

செகத்தில்புகழ்படைத்த — பகவான்ராமர்க்குதேவி
சீதாங்கனியம்மன்வந்தாள் — உலகமாதா
சீதாங்கனியம்மன்வந்தாள்

பகலவனெளியைப்போல் — பதக்கம்மார்பில்மின்ன

சுருள் பங்கயஇங்கித — மதிமுகவதனி
பச்சைமேனியன் — மெச்சிடும்மதனி செ

மந்தாரைபாரிஜாத — மல்லிகைமுல்லைசூடி
சந்தோஷமாகவே — சர்மிதன்னையேதேடி

சுருள் சீதளகளப — வாடையும்வீச
மாதர்களிருபுரம் — கவரிகள்வீச செ

வையகம்புகழுஞ்செம்மங் குப்பம்நகரில்வாசன்
துய்யசான்றோர்குல பாலன்ஷண்முகதாசன்

சுருள் துயர்தனைமிக தீர்த்திடும்மாது
கயல்விழிகன்னியர் போற்றிடுஞ்சாது செ

## ஸ்ரீராமர் சீதை சம்வாதம்

சீதை வானவர்கள் தினந்தொழும் தீனதயாபரனே
ஜானகியாளுந்தன் திருதாளிணைக்கேசரணம்செய்தேன் வா

ராமர் சரணமென்றுதாள்பணிந்த ஜனகராஜர்செல்வியாளே
தரணியிலேசுகமாக தையலரேவாழ்ந்திருப்பாய் சர

சீதை வாழுமென்றுவாக்களித்த வல்லவரேபிராணநாதா
வஞ்சியாளெனையழைத்த சங்கதியைச்சொல்லுவீரே வா

ராமர் சொல்லுமென்றுதானுரைத்த சுந்திரமேமாமயிலே
சல்லாபமாய்வார்த்தையாடி தனித்துநாம்வீற்றிருப்போம் ()

## சீதை விருத்தம்

வீற்றிருமென்றுவார்த்தை விளம்பியபிராணநாதா
கீர்த்தியாய்முன்னாள்வனம் கன்னியாள்பார்த்ததெல்லாம்
சேர்த்தியாய்இன்னாள்பார்க்க நானுமேகருத்தில்கொண்டேன்
பார்த்திபாயெனையழைத்து பாசமாய்க்காண்பிப்பீரே.

## ஸ்ரீராமர் விருத்தம்

அன்புடன்வனத்தைப்பார்க்க ஆசைநீகொண்டதாலே
கன்னியேஇன்னஞ்சிலநாள் கழித்துமேவுனக்குயானும்
முன்னாளில்நாமும்பார்த்த வனங்களைக்காட்டுகின்றேன்
இன்பமாய்என்னருகில் இருந்திடாய்பெண்ணேநீதான்.

## ஸ்ரீராமர் பொது விருத்தம்

ஆரடாகாவல்காக்கும் அதிபலதோட்டிகேளாய்
சீரடாநகர்முழுதுஞ் சென்றுமேபார்த்துநீங்கள்
பேரடாகுடிகள்பேசும் பிரியதோர்வசனந்தன்னை
கூறடாஎந்தனுக்கு கொஞ்சமும்பிசகில்லாமல்.

## பொது வசனம்

இவ்விதமாகத்தானே இராமர் வாக்கியத்தை சிரமேற்கொண்டு தலையாரிகள் நகர்சோதனைக்கு சென்றிருக்கையில் அயோத்தியில் வாசமாகிய வண்ணான் வருகிறவிதம் காண்க.

## வண்ணான் வருகிற விருத்தம்

அந்தமாய்அயோத்திதன்னில் அனுதினங்கலைவெளுக்கும்
விந்தைசேர்வண்ணான்தானும் வெளுத்ததோர்ஆடைதன்னை

குந்தியேமூட்டைகட்டி கோகுமேல்போட்டுக்கொண்டு
அந்திபொழுதானதாலே அவசரமாய்வருகின்றானே.

வண்ணான் தரு

வண்ணான்வந்தானே கலைவெளுக்கும்
வண்ணான்வந்தானே

வண்ணான்வந்தான்வெகு விந்தையதாகவே
குண்ணமல்மூட்டையை கோகுமேல்போட்டுமே வ

கஞ்சிக்கலயமும் கக்கத்தில்மூட்டையும்
கொஞ்சுங்கிளியான மனையாளைத்தேடி வ

## வண்ணாத்தி வருகிற கவி

என்னிடநாதனாரும் இன்றுமேஅழைக்கக்கேட்டு
கன்னியாள்தானெழுந்து கருத்ததையறியவேண்டி
மின்னிடும்பணிகள்பூண்டு மெல்லிமாருடனேகூடி
உன்னிதகணவன்பக்கல் உத்தமிவருகின்றாளே.

வண்ணாத்தி தரு

வண்ணாத்திவந்தாளே நாதனைத்தேடி
வண்ணாத்திவந்தாளே

வண்ணாத்திவந்தாள்வெகு விண்ணாணம்பேசியே
நண்ணியேசபைமுன்னே நாடிகைவீசியே வ

கோணகொண்டையும்போட்டு குலுங்கநடைநடந்து
வேணமல்லிகைசூடி வெகுவிதஆடைபூண்டு வ

வண்ணாத்தி வசனம்

பிராணநாதா! உமது பொற்பாத கமலங்களுக்கு அடியாள் நமஸ்காரம்.

வண்ணான் கவி

வந்தனம்செய்துநின்ற வஞ்சியேசொல்லக்கேளாய்
விந்தையாய்சலவைசெய்த வேணதோர்ஆடைதன்னை
தந்துமேவீடுவீடாய் சாதமும்வாங்கிக்கொண்டு
குந்தகமில்லாமல் கோதையேவருகுவாயே.

வண்ணாத்தி சிந்து

ஆடைகள்தன்னையெல்லாம் மாது
அடுக்கடுக்காகவே ஒன்றாகச்சேர்த்து

மூடியேமூட்டைகட்டி அழகாய்
முதுகின்தோளின்மீது தூக்கியேமாட்டி
நாடியே சாதம்வாங்க கஞ்சிப்பல்லாவை
நழுவாமல் கரமீதில்பற்ற
பேடைமயில் அன்னம்போல அழகாய்
பின்வமில்லாமலே தான்நடந்தாள்
வீதிவீதியாய் நடந்து மன்னர்கள்
வீற்றிருக்கும் அரண்மனை தனைத்துடர்ந்து
வேதியர்கள் தானணியும் நல்ல
விசித்திரப்பட்டாடை தனைக்கொடுத்து
அந்தமுள்ள ராஜராணியும் ஆடைகளை
அவரவர்விடு தவறாமல்கொடுத்து
சாதமதை பல்லாவில்வாங்கி மாதர்கள்
தந்ததோர்பக்ஷணங்கள் தன்னையும்வாங்கி
காதலாய்நா தனிடம்செல்ல கடுகியே
வேகமாக வோடியேவந்தாள் தந்தினம்

விருத்தம்

என்னிடமனதின்படி இசைந்திடும்நாதாகேளீர்
மன்னர்கள்வீடுவீடாய் மங்கையாள்சென்றுஇப்போ
சொன்னதோர்வாக்குபோல சுத்தமாய்ஆடைதந்து
அன்னமும்எடுத்துவந்தேன் ஆசையாய்ப்புசிக்கவாரும்.

வண்ணான் கந்தார்த்தம்

என்னடி சிறுக்கிநீதான் இத்தனை நேரமட்டும்
பன்னியே வார்த்தையாடி பசப்பியே திரிந்தலைந்து
அன்னமுங் கொஞ்சங்கொண்டு அர்த்தராத்திரியில் வந்தாய்
கன்னியே எதிர்நில்லாதே,

தரு

கன்னத்திலடித்தேன் உந்தனிட
சென்னியிலுதைத்தேன்

என்னதீரங்கொண்டு எவரிடம்பேசினாய்
என்முன்னேநிற்காதே கன்னியேசென்றிடு கன்

பொது வசனம்

இவ்விதமாகத்தானே வண்ணான் தன் பெண்ஜாதியை அடிக்க அவள் கோபத்தோடு அப்பட்டணத்தில் ஓர்வீட்டில் தங்கியிருக்க வண்ணானுடைய தாயாருக்குத் தெரிந்து மகனுக்கு சொல்லுகிற விதம் காண்க.

### வண்ணாத்தி கவி

மகனேநீகேளாயுந்தன் மனைவியையடித்ததாலே
அகமதில்வீற்றிராமல் அழற்றருங்கோபத்தோடு
நகரமதில்ஓர்வீட்டில் நாரியுந்தங்கிருக்காள்
சகஜமாயழைத்துவந்து தையலைவைத்துவாழ்வாய்.

### வண்ணான் கவி

அம்மணிதாயேகேளாய் அயல்வீடுதங்கியமாதை
சம்ப்ரமாயழைக்கமாட்டேன் சீதையைராமர்தானும்
வம்பதுசெய்துமீட்டு வாழ்கின்றாரவர்க்கேயாகும்
நம்மிடகுலத்துக்கீனம் நங்கையால்ஆகுந்தாயே.

### வசனம்

ஆனால் கேளும் தாயே! நீ சொல்லக்கூடிய வசனங்களை தள்ளினேன் என்று கோபம் வேண்டாம். ஸ்ரீராமரல்லவோ சீதையைக் கொண்டுபோன ராவணனை சம்மாரம்செய்து சீதையை மீட்டுவந்து ராஜரீகம் செய்கின்றாரே; அதைப்போல என்னையும் அழைத்து மனையாளைவைத்து வாழும்படி சொல்கின்றாயே; நமது குலத்துக்கு ஈனம் நேரும் தாயே.

### தோட்டி பொது விருத்தம்

வண்ணானும்தாய்க்குரைத்த வார்த்தையைதலையாரிகள்
குண்ணவேசெவியிற்கேட்டு கோபமேமிகவேகொண்டு
திண்ணமாய்ராமருக்கு சேதியைத்தானுரைக்க
கண்ணில்நீர்ததும்பி கவலையாய்வருகின்றாரே.

### தோட்டி தரு

சரணம் சரணமையா
ரகுநந்தனா சுவாமி ரகுநந்தனா உந்தன்
தாளிணைக்கே கோடிசரணஞ் செய்தேன் சர

### ஸ்ரீராமர் தரு

வந்தனம் செய்துநின்ற
தோட்டிகளா அப்பா தோட்டிகளா உலகில்
வாழ்குவீர் சுகமாக தோட்டிகளா வந்

### தோட்டி தரு

என்னவென்று சொல்லப்போறோம்
ரகுநந்தனா சுவாமி ரகுநந்தனா நாங்கள்
இன்றறிந்த சேதிதன்னை ரகுநந்தனா என்

## ஸ்ரீராமர் தரு

ஒன்றும்ஒளியாமல் சொல்வீர்
தோட்டிகளா அப்பா தோட்டிகளா நீங்கள்
கண்டறிந்த சேதிதன்னை தோட்டிகளா ஒன்

## தோட்டி தரு

ஜானகியை பழுதுசொன்னான்
ரகுநந்தனா வண்ணான் ரகுநந்தனா அதை
சொன்னால் துன்பங்கள்நேரும் ரகுநந்தனா ஜான

## ஸ்ரீராமர் தரு

என்ன காரணத்திற்காக
தோட்டிகளா வண்ணான் தோட்டிகளா இன்று
ஏந்திழைமேல் குற்றம்சொன்னான் தோட்டிகளா என்

## தோட்டி விருத்தம்

வண்ணான்தன்தேவிதன்னை மயிர்பிடித்தடித்தபோது
குண்ணவே அயல்வீடு கோதையாள் தங்கியிருக்க
நண்ணியேவண்ணான்தாயார் நாரியைஅழையுமென்றாள்
திண்ணமாய்ராமரைப்போல் தையலைவைத்துவாழேனென்றான்.

## வசனம்

ஆனால் கேளும் சுவாமி! நாங்கள் நகர்சோதனைக்கு போயிருக்கின்றபோது வண்ணான் தன் பெண்சாதியை அடித்தான். அதற்கு அவள் கோபங்கொண்டு அயல்வீடுதங்கி இருக்கின்றபோது வண்ணான் தாயானவள் மகனைப்பார்த்து பெண்சாதியை அழைத்து வரும்படி சொன்னாள். அதற்கு வண்ணான் சொன்னதாவது என்னவென்றால், ஸ்ரீராமரல்லவோ சீதையைக் கொண்டுபோன இராவணனைச் சம்மாரஞ்செய்து சீதையை மீட்டுவந்து ராஜரீகம் செய்கின்றாரே அதைப்போல என்னையும் மனையாளை அழைத்துவந்து வாழும்படி சொல்கின்றாயே என்றான் சுவாமி.

## ஸ்ரீராமர் கவி

அருகினில்அமர்ந்திருக்கும் அமைச்சரேசொல்லக்கேளீர்
திருத்தமாய்வண்ணானவன் சீதைமேல்பழுதுசொல்ல
வருத்தமும்மிகவேகொண்டேன் வையகத்தோர்நகைக்க
கருத்துள்ளபரதன்தன்னை கனசபைகொண்டுவாராய்.

## பரதன் வருகிற கவி

தரணியெல்லாம் புகழ்படைத்த சூரியகுல
தசரதர்க்கு சுதனான வந்தசீலன்

வரிசிலை கெதைவாளுங் காத்தில் தாங்கி
வயிரமுடி மணிமகுடம் அலங்கரித்து
திறமையுள்ள சிற்றரசர் வணங்கிப்போற்ற
சேயிழையர் இருபுரமும் கவரிவீச
பரிவுள்ள அண்ணனவர் அழைக்கக்கேட்டு
பரதராஜன் கொலுவாக வருகின்றானே.

பரதன் தரு

பதியில்புகழ்படைத்த கதிரவன்குலத்தில்வந்த
பரதராஜனும்வாரானே வேடிக்கையாக
பார்மன்னர் புடைசூழவே பதி

மணிமகுடம்பளபளென்ன மதிமுகம்தளதளென்ன
கணிகையர்கள்கவரிவீசவே பரதராஜன்
காகுத்தன்போல் வந்துமேவினான் பதி

சக்கரம்கெதைகோதண்டம் தனுவாள்கரத்திலேந்தி
தக்கவேமந்திரிசூழவே பரதராஜன்
சம்ப்ரமுடன் வந்துமேவினான் பதி

சந்திரகுலா தனவர் எந்தனையழைத்தசேதி
தந்திரமாய்தானறியவே பரதராஜன்
விந்தையாய் கொலுவதாகினான் பதி

பரதன் தரு

சரணமண்ணாசரணமண்ணா தாளிணைக்கேயான்சரணம்
கருணைவைத்துஇன்றுஎன்னை களிப்புடனழைத்தசேதி
சுருள் கலக்கமில்லாமலே கருத்ததைசொல்லும்
நலமாய்என்னிட வாய்மொழிகொள்ளும் சர

ஸ்ரீராமர் தரு

பாதமதைபோற்றிசெய்த பரதனேயெந்தன்தம்பி
பூதலத்தில்சுகமாக புனிதனேவாழ்வாய்நம்பி
சுருள் புத்தியில்மிகுத்திடும் உத்தமதீரா
சித்தமும்வாடுதென் செய்குவேன்வீரா பாத

பரதன் தரு

என்னமனக்குறையண்ணா இன்றுநாளில்உந்தனுக்கு
பண்ணுவீரேசேதிதன்னை பாசமுடன்எந்தனுக்கு
சுருள் பாரினில்எதிரி வீரர்கள்யாரு
கூறுவீர்எனக்கு போரதைநீரும் என்

ஸ்ரீராமர் தரு

சொல்லமனம்வல்லையப்பா சுந்திரமேகண்மணியே
மெல்லியந்தசீதையாலே மனம்வாடலானேன்ஐயோ

சுருள் மெத்தவேயுலகினில் கீர்த்தியும்போச்சுதே
பத்தியேஎன்வயிறு எரியவுமாச்சுதே சொ

## பரதன் கவி

அரக்கரைகருவறுத்த அண்ணலேராமச்சந்திரா
செருக்கவேயுன்மனதில் சஞ்சலங்கொள்ளவேண்டாம்
பெருக்கவேயுலகில்வாழ்ந்த பூவையாள்சீதைமீது
வெறுத்திடஎண்ணங்கொண்டீர் விபரத்தைசொல்லுவீரே.

## ஸ்ரீராமர் கவி

கூறுவேன்பரதாகேளாய் குற்றமாய்வண்ணான் தானும்
சீருள்ளசீதையாளை சின்னதோர்வசனஞ்சொன்னான்
காருள்ளநீங்கும்முன்னே கானகம்தன்னில்மாதை
வாருமேவிட்டுநீயும் விசனமேகொண்டிடாமல்.

## பரதன் புலம்பல் தரு

அண்ணாஎன்னகோபமோ நான் சொன்னால்மனஸ்தாபமோ
அன்னையாள்சீதையை ஆரண்யம்விட்டாலே
ஆகாதபெரும்பழி ஆகுமேயினிமேலே அ

வண்ணான்மொழியைக்கேட்டு சீதையாளைவனத்தில்விடநீதியோ
கண்ணாஉமக்கிந்த கருத்துவந்ததேதன்ன
குண்ணாதேஎன்மனம் கோரிடவும்முன்னே அ

எப்படியான்துணிந்து சீதையாளை எவ்வனத்தில்விடுவேன்
கெற்பவதியாச்சே கலங்கித்தவிப்பாளே
அற்பவண்ணான்சொல்லால் அலையவிடஏச்சே அ

## ஸ்ரீராமர் கவி

என்னடாபரதாநீதான் என்வாக்கைதள்ளிப்போட்டு
பன்னியேஎனக்குபுத்தி பலவிதம்சொல்லவந்தாய்
கன்னியாள்சீதையாளை கானில்நீவிடாவிட்டால்
மன்னவன்என்முகத்தில் விழிக்கவும்வேண்டாம்செல்லும்.

## ஸ்ரீராமர் வசனம்

ஆனால் கேளுங்கள் காவலாளிகளே! நீங்கள் சென்று என் தம்பியாகிய சத்துருக்கனை நான் அழைத்ததாக கொண்டு வருகுவீர்.

## சத்துருக்கன் வருகிற கவி

வெற்றியில்மிகுந்தஅண்ணன் விரைவினிலழைத்தாரென்று
சுத்தமாய்தூதர்வந்து சொல்லியவசனங்கேட்டு
சித்திரமகுடம்பூண்டு சீர்பணியலங்கரித்து
சத்துருக்கமகாராஜன் சபைநாடிவருகின்றானே.

### சத்துருக்கன் தரு

எத்திசையும்புகழ்பெற்றதீரன் ரகுநாதன் தம்பி
சத்துருக்கமகாராஜன் வாரேன்
ரத்தினத்தினலிழைத்த நல்லமகுடம்பூண்டு
சுருள் நாகரீகமாய் ஏகபோகமாய்
வாகுவேல்மதன் போலவொத்தவன் எத்

தங்கப்பதக்கம்மார்பில்மின்ன தகதகவென்று
செங்கையில்கெதைவாளும்துன்ன
அங்கஜன் இவனோவென்று அரிவையர்கண்டுவாட
சுருள் ஆசையாய்பல ராஜர்வணங்கிட
மாசிலாமணி மாலைகுலுங்கிட எத்

அண்ணலழைத்தசேதிதன்னை இன்றையநாளில்
அறியவேண்டுமென்றுமுன்னே
வண்ணமுள்ளமுரசு வாத்தியம்முழங்கிட
சுருள் வாசனைபரிமள வாடைகள்வீச
தேசமன்னர்கள் கண்டுமேபேச எத்

### சத்துருக்கன் கவி

அந்தார்க்கிடுக்கம்செய்த அரக்கரைகருவறுத்த
சுந்திரமுள்ள அண்ணா உன் திருவடிதன்னில்யானும்
விந்தைசேர்மல்லிகைமுல்லை வேணதோர்துளசிகொண்டு
வந்தனம்புரிந்துநின்றேன் வாசவாகார்த்திடாயே.

### ஸ்ரீராமர் தரு

வந்தனம்புரிந்ததம்பியே சுகமாகநீவாழ்குவாய் வந்
இந்தஉலகமதில் எவர்கள்உனக்கீடாவார்
சுருள் என்னிருகண்மணி உன்னிதபாலா
மண்ணினில்கீர்த்தியால் வாழ்குவாய்மேலா வந்

### சத்துருக்கன் தரு

அண்ணாகமலகண்ணனேஉனை அரிகரிஎன்றுமேயாவரும்போற்றும் அ
ஒண்டியாகவேநீரும் ஓய்யாரமாய் தனித்து
சுருள் உத்தமாநீர்கொண்ட கருத்ததுஎன்ன
சுத்தமாய்எனக்கு சொல்லுவீர்அண்ணா அண்

### ஸ்ரீராமர் தரு

ஐயோநான்என்னசெய்குவேன் என்மனமதுவாடுதே ஐ
வையகத்திலுள்ளமாந்தர் ஐயோநம்மைபழிக்க
சுருள் வந்ததேபெரு மூட்டையாய்சதி
சிந்தைகலங்கியே வாடுதேமதி ஐ

### சத்துருக்கன் தரு

பழிப்புநேர்ந்ததெப்படிபலகலை யுணர்ந்தநலந்தரும்அண்ணா பழி
அழிவில்லா தம்பிமார்கள் ஆகாநாங்களிருக்க

சுருள் அரசுக்குஈனம் வந்ததுஎப்படி
குறைதனைநீரும் கூறுவீர்இப்படி பழி

### ஸ்ரீராமர் கவி

தப்பிதமானமொழி தையலாள்சீதைமீது
ஒப்பியேயவண்ணான் தானும் யுரைத்ததாலே
கப்பியேசூழ்ந்திருக்கும் கானகந்தன்னில்விட்டு
செப்புவேன்விடியாமுன்னம் சீக்கிரம்வருகுவாயே.

### சத்துருக்கன் புலம்பல் தரு

என்னநான்செய்வேனையோ என்மதனிசீதையாளை
எவ்வனத்தில்விடுவேன் ரகுநாதா

கன்னல்மொழிஅன்னையாலேக லக்கம்ஒன்றுமில்லையே
கவலைநீர்கொள்ளவேண்டாம் ரகுநாதா

கற்பதுஅழியாத நற்குணசீதையாச்சே
கருத்தில்யோசித்துப்பாரும் ரகுநாதா

அற்பனாகியவண்ணான்சொல்லால் அன்னையாளைகானகத்தில்
அலையவிடநீதியோ ரகுநாதா

அயோத்திநகரமதில் அன்னைசீதையில்லாவிட்டால்
அனர்த்தம்வந்துநேருமே ரகுநாதா என்

### சத்துருக்கன் கவி

அக்கினியில்முழுகிவந்த அன்னையாள்சீதைமீது
மிக்கவேபொய்யுரைத்தால் மீளாதநரகமாகும்
துக்கமானமொழி தெரிவிக்கவந்தீர்அண்ணா
சிக்கவேகானகத்தில் சீதையைவிடவேமாட்டேன்.

### ஸ்ரீராமர் குறுங் கவி

அந்தமாய்வீற்றிருக்கும் அதிபலகாவல்காரா
சுந்திரயிளையோன்தன்னை சீக்கிரம்கொண்டுவாராய்.

### லட்சுமணன் வருகிற கவி

அண்டாண்ட புவனமெல்லாம் மதிக்குந்தீரன்
அரக்கர்களை கருவறுக்க வந்தவீரன்
கொண்டல்மொழி திருமேனிக் கமலக்கண்ணன்
கோரியதோர் விதமதை யறியவேண்டி

தண்டுடனே கிலவாளுங் காத்தில்தாங்கி
தாணியெல்லாங் கிடுகிடென தட்டிக்கொட்டி
திண்டோள் மணிமுடி யலங்கரித்து
ஜெயவீர லட்சுமணன் வருகின்றானே.

### லட்சுமணன் தரு

இரவிகுலமேசெழிக்க இராமன்தம்பியாய்வந்த
இலட்சுமணன்வந்துமேவினேன் கொலுவைநாடி இ

காத்தில்கெதைவாளுடன் கனகபூஷணம்பூண்டு
சுருள் கன்னியரிருபுரம் கவரிகள்வீச
காவலர்கண்டு வணங்கியேபேச இரா

அன்னையுரைத்தமொழி அன்பாய்மனதில்கொண்டு
பன்னியேகானகம் பரிவாய்பதினாலாண்டு
சுருள் பங்கையகண்ண னோடுமேகூடி
தங்கியேவந்தேன் தேசமேநாடி இரா

தந்திரத்தில்மிகுந்த இந்திரஜித்தையும்கொன்றேன்
விந்தையுள்ளராவணன் சேனைதன்னையேவென்றேன்
சுருள் விரைவுடன்அண்ணன் எந்தனை இன்று
கருத்துடனழைத்ததை காணுவேன்சென்று இரா

### லட்சுமணன் தரு

அண்ணாசரணம் மேக வண்ணாசரணம்
அண்ணாவுந்தன்பாதம் அறுகுதுளசிகொண்டு
நண்ணாகவேதுதி நான்செய்தேனேகண்டு அ

அரக்கசம்மாரா அகிலம் புகழும்கெம்பீரா
திருமுகம்வாடியே தேவா இருப்பதென்ன
கருத்ததைஎனக்கு கழறுவீரே அண்ணா அ

### ஸ்ரீராமர் விருத்தம்

தாளடிபணிந்துநின்ற தம்பிலட்சுமணாவாராய்
நாளுமுன்கீர்த்தியோங்க நலமுடன்வாழ்வாய்மண்மேல்
களங்கமில்லாதிருந்த கதிர்குலம்செழிக்கக்காட்டில்
வளம்பெருஞ்சீதையாளை விட்டுமேவருகுவாயே.

### லட்சுமணன் தரு ரூபகம்

எப்படிதுணிந்துநான் செப்பியமொழிபோல
ஒப்பியேகானகத்தில் ஒண்டியாய்விடுவேன்நான் அண்ணாவே

நற்றவமுனிவர்கள் நாளும்புகழுமெந்தன்
குற்றமில்லாஅன்னையை கொண்டுகானில்விட அண்ணாவே

தருக்கள்நிறைந்தகாட்டில் தனித்துவிட்டுமேவந்தால்
சிறுத்தைபுலிகரடி சென்னுய்கள்கொன்றிடுமே அண்ணுவே

சீதைவனமேபோனல் சீருஞ்சிறப்பும்போகும்
மூதேவிவாழ்வாளெங்கும் மதிப்பும்கெலிப்பும்போமே அண்ணுவே

### ஸ்ரீராமர் கவி

முன்னெருநாள் ஏகாந்தத் திருந்துநாங்கள்
இன்பங்கள் நுகர்ந்திட்ட போதுசீதை
இன்னெருக்கால் வனம்பார்க்க விருப்பமென்ருள்
அன்னவள் மனம்போல அழைத்துச்செல்வாய்.

### லட்சுமணன் தரு

காட்டில்விடச்சொன்னஅண்ணு உந்தன்
கழலடிபோற்றிநண்ணு
மேட்டிமையாகவே காட்டினில்வேடிக்கை
காட்டியழைத்துவாரேன் களிப்புடன்நாட்டிற்கே க

### ஸ்ரீராமர் தரு

அழைத்துமேவருகாதேதம்பி எந்தன்
ஆக்கினைமீறியேநம்பி
பிழையொன்றும்நேராது பெருந்தவமுனிவர்கள்
நுழைந்திடுங்காட்டினில் சீதையைவிட்டாலே அ

### லட்சுமணன் தரு

கெற்பவதிசீதையாச்சே விட்டால்
அற்பருக்குமிழிவாச்சே
உற்பவித்தநாளாய் உருந்துக்கம்மிகவாச்சே
சொற்பனந்தன்னிலும் சிந்திப்பதென்பேச்சே கெ

### ஸ்ரீராமர் தரு

ஆஹா ஹாஎன்வார்த்தைதடுக்குறுய் மெத்த
அறிந்தவன்போலநீபடிக்கிறுய்
ஓஹோஹோஅவளாலே பழிப்புக்கிடமாச்சே
பாகார்மொழியாளே விடுவிடுமிகவுச்சே ஆ

### லட்சுமணன் கவி

கோபங்கொள்ளவேண்டாம் கதிர்குலமணியேஅண்ணு
ஆபத்துநேருமென்று அடியேன்நான்தடுத்துரைத்தேன்
தபசிகள்வாழுமந்த தண்டகாரண்யம்தன்னில்
சுபமுடன்விட்டுவாரேன் சுந்திராஇருந்திடீரே.

### லட்சுமணன் விருத்தம்

ஜெகம்புகழ்ஜனகராஜன் செய்திடும்தபத்தால்வந்த
அகமகிழ்அண்ணியாளே அடியேன்நான்போற்றிசெய்தேன்
சுகமுடன்வனத்தைப்பார்க்க சிந்தைநீகொண்டதாலே
அகிலம்புகழுமண்ணன் அழைத்துமேசெல்லச்சொன்னார்.

### சீதை கவி

என்னடிபணிந்துநின்ற எழில்பெரும்இளையகோவே
இன்னிலம்மதிக்கயாண் டிமையவர்புகழவாழ்வீர்
பன்னியசேதிதன்னை பைங்கொடிஅத்தையர்க்கு
மன்னியேயுரைத்துவாரேன் மைத்துனாவீற்றிருப்பீர்.

### போது வசனம்

இவ்விதமாக கௌசலை வருகிறவிதங் காண்க.

### கௌசலை வருகிற கவி

கங்கையர்கவரிவீச நானிலம்புகழ்ந்துபேசும்
இங்கிர்தவதனரூபி எழில்பெருஞ்சபையைநாடி
பங்கயமுகமிலங்க பாததண்டைகள்கொஞ்ச
மங்களமாய்கௌசலை மாதிதோவருகின்றாளே.

### கௌசலை தரு

கதிர்குலம்தழைக்க — காகுத்தன்தன்னைஈன்ற
கௌசலைமாதுவந்தாள் — சுகாஞ்சிதமாகியலங்கிர்தபூஷணி
கௌசலைமாதுவந்தாள்

தேசமெங்கும்புகழ் — தசரதராஜன்தேவி
சுருள் தங்கியஇங்கிர்த — மங்கையர்கூடியே
பொங்கியமாமொழி — யோங்கியேபாடியே — கதி

மேகம்தன்னைநிகர்த்த — கூந்தல்களபம்வீச
சுகந்தபுஷ்பஞ்சூடியே — பலமங்கையர்கூடியே
சுகந்தபுஷ்பஞ்சூடியே

நீலவிழிகள்துன்ன — நிகரில்லாகொப்புமின்ன
சுருள் சித்திரரத்தின — பணிகளும்சூட்டி
மெத்தஇலங்கிர்த — பதக்கமும்பூட்டி — கதி

### சீதை விருத்தம்

அந்தரவானோர்தேவர் அனுதினம்தொழுதுபோற்றும்
சுந்திரரவிகுல சுவாமியைஈன்றெடுத்த
விந்தைசேர்அத்தையாரே மெல்லியாளுந்தன்பாதம்
சிந்தையுமகிழ்ச்சியாக சேயிழைபோற்றிசெய்தேன்.

கௌசலை தரு

வந்தனம்புரிந்தசிரோன்மணி நல்ல
வானவர்புகழ்ந்திடும் ஜானகியாளெனும்
சுந்தரம்மிகுந்தமாமணி
அந்தம்அழகுடனே அரிவைசமுகம்நாடி
சுருள் அவசரமாகவே அரிவையேவந்தாய்
அறிவிப்பாய்எனக்கு சேதியைநன்றாய் வந்

சீதை தரு

கூறுவேன்கேளும்மாமியே இப்போ
கோதையாள்யானும் பேதமில்லாமலே
கோரிவந்ததைநேமியே
பாரினில்கீர்த்தியோங்கும் பர்த்தாவுடனொருநாள்
சுருள் பிரியமாய்வனம் பார்க்கவுங்கேட்டேன்
அரிவையெனக்குதா புறப்பட்டேன் கூறு

கௌசலை தரு

அம்மாஎனதுகண்மணி நீ
அடர்வனம்செல்ல கடமையுமல்லவே
சும்மாயிருப்பாய்பெண்மணி
இம்மாநிலந்தனிலே இன்பம்அநேகமுண்டு
சுருள் ஈண்டுகளித்துமே கவலையகற்றிடு
பண்டுயடைந்த துன்பம்நினைத்திடு அம்

சீதை தரு

வேதமுழக்கம்எங்குமே தப
ஞானிகள்கூட்டமும் சாதனைநாட்டமும்
தோதாய்காணலாம் அங்கையே
ஆதலால்அடர்வனம் அன்பாய்யானும்கண்டு
சுருள் அகற்றியேமனக்குறை அரிவையாள்வாரேன்
சுகமுடனேவிடை தந்திட்டால்போறேன் வேத

கௌசலை விருத்தம்

ஒருமையுடன்வனம்பார்க்க உகந்துமேபோறேனென்ற
மருகியேஉனக்குஇப்போ மாதமும்ஆறுமாச்சு
திருமேனியின்அழகுகுன்றி திகில்பட்டுகெற்பம்நாசம்
பொருந்திடும்போகவேண்டாம் பெருந்துன்பம்அடைகுவாயே.

சீதை தரு

சேனைப்பரிகரியோடுவனமும் நான்சென்றாலே
சித்தமுங்கலங்குமோ அத்தையாரே வனம்
சுற்றிநான்பார்த்துவாரேன் அத்தையாரே சே

கௌசலை தரு

காடிபுலிசிங்கம் காட்டானைபன்றிகள்
கர்சிக்கும்ஒலிகேட்டால் மங்கையே உந்தன்
கெற்பங்கலங்கிபோகும் அங்கையே காடி

சீதை தரு

முந்திநாள்வனத்தில் பழகியான்இருப்பதால்
சிந்தையதுமிக வாடாதே விடை
தந்துமேஅனுப்புவாய் நாடாதே முந்

கௌசலை தரு

முன்னுலேபட்டதுன்பம் எண்ணியேபாராமல்
நன்னயவிடைகேட்க வந்தாயே நான்
பன்னும்மொழியால்வனம் நொந்தாயே முன்

சீதை கவி

நொந்திடவில்லையம்மா நினைத்திட்டவாறுபோல
சிந்தையுங்களித்துகானில் சுற்றியேபார்த்துவரேன்
எந்தனுக்குதுன்பமில்லை இளையவரிருக்கப்பக்கல்
சந்தோஷமாய்விடை தந்துமேஅனுப்புவாயே.

கௌசலை கவி

அன்னமேசீதையாளே அருந்தவமுனிவர்வாழும்
பன்னியேவனவேடிக்கை பார்த்திடஎண்ணங்கொண்டாய்
உன்னிடபிரியம்போல உகந்துமேகானில்சென்று
கன்னியேவருகுவாயே கஷ்டம்நீயடைந்திடாமல்.

லட்சுமணர் கவி

ஆரியர்போற்றுந்தெய்வ அன்னையேமடந்தையாளே
சிரியர்வாழுங்காட்டில் செல்லவும்நேரமாச்சு
தைரியம்விடவேவேண்டாம் தண்டகாரண்யஞ்செல்ல
தேரினில்ஏறுவாயே தேரதைநடத்துவேனே.

## சீதையம்மன் ரதம் ஏறுவது

தரு

தேரின்மீதுஏறினாள் சீதாலட்சுமி
தேரின்மீதுஏறினாள்

தேரின்மேல்ஏறினாள் தேவர்கள்புகழ்ந்திட
சாரியாய்மாதர்கள் சாமரம்வீசிட தே

ஆதிமறையவர் ஆசீர்வதித்திட
ஆவலாய்மாந்தர் பேசிதுதித்திட தே

வெற்றிசங்குபேரி வாத்தியம்முழங்கிட
வேதநாதபோத கீதங்கள்பாடிட தே

லட்சுமணர் கந்தார்த்தம்

கன்னியாள்சீதைமாது கானகம்பார்க்கவென்று
உன்னிதாதத்திலேறி உத்தமிவீற்றிருக்க
பன்னியேபுரவிதன்னை பிசகாமல்ரதத்தில்பூட்டி
அன்னையாள் மனமகிழ,

தரு

அதட்டியேயடித்தேன் புரவிதன்னை
பதட்டமாய்இடித்தேன்
கதறியேபுரவியும் அதிவேகமாய்செல்ல
கண்டுமேமாந்தர்கள் கலங்கிபயங்கொள்ள அ

சீதை கந்தார்த்தம்

தரணியெல்லாங்கிடுகிடென தட்டியேபுரவிதன்னை
பரிவுள்ளஇளையோன்தானும் பாசமாய்நடத்தும்போது
திரமுள்ளரதத்தினச்சு திட்டெனமுறிந்ததையோ
அரிகரி என்னசெய்வேன்,

தரு

ஆகா ரதத்தைநிறுத்து இளையகோவே
ஒகோ செல்லலாம்பொறுத்து
தோகையாள்எந்தனுக்கு துன்பங்கள்நேருமோ
ஏகவேண்டாங்கானகம் இறங்கிமனதாறுமே ஆ

லட்சுமணர் கவி

அம்மணிதாயேகேளும் அச்சதுமுறிந்ததென்று
வெம்மியேசோகம்வேண்டாம் வேறுதேர்சிங்காரித்தேன்
நம்பியேரதத்திலேறும் நல்லதோர்வனமேசெல்ல
எம்பிரான்துணையிருப்பார் எத்துன்பம்அணுகிடாது.

சீதையம்மன் சகுனம் காண்பது

தரு

தேரேறியேநாமும் செல்லுகையில்கானகம் மைத்துனரே இதோ
சீருதுபார்ஆந்தை சிந்தைவேறுகுதே மைத்துனரே

லட்சுமணர் தரு

சீறினதால்ஆந்தை தீதொன்றுமணுகாது மதனியாரே தீ
சிந்தைகலங்கியே நொந்துமேவாடாதே மதனியாரே

சீதை தரு

குத்திச்சுடுமென்று கோட்டானுங்கூவுதே மைத்துனரே துன்பம்
கோதையாளெனக்கு என்னதான்நேருமோ மைத்துனரே

லட்சுமணர் தரு

பத்தியாய்ராமரை சித்தத்தில்நினைத்துக்கொள் தாயேசீதா நமக்கு
பழுதுமேநோாது பொழுதுமேவிடிந்ததே தாயேசீதா

சீதை தரு

கற்பாறைவனத்தில் காட்டுவேடுவச்சியும் மைத்துனரே அவள்
ஒற்றகுரலோசை ஓங்கியேஅழுகிறாள் மைத்துனரே

லட்சுமணர் தரு

ஏனோமனக்குறையால் இவ்வனத்தில்தனித்து தாயேசீதா கதறி
ஏந்திழையழுகிறாள் இதுகுற்றமாகுமோ தாயேசீதா

லட்சுமணர் கவி

அன்னையேகேளாய்நாமும் அன்புடன்சரஸ்வதி
புண்ணியநதிக்குவந்தோம் பாசமாய்இதிலிறங்கி
கன்னியேதீர்த்தமாடி களையதுதெளிந்துஇப்போ
உன்னிதமாகவாரும் ஓங்கியேவனத்தைச்செல்வோம்.

சீதை கவி

செகம்புகழ்நதிதன்னில் தீர்த்தமும்மிகவேயாடி
மருத்துவமுள்ளதேரில் மங்கையாள்ஏறிவந்தேன்
விருத்துவமுள்ளதேரை விரைவினில்நீர்செலுத்தி
வகுத்துமேயுரைப்பீர்இந்த வனங்களின்பேரைதானே.

லட்சுமணர் தரு

தெரியுதுபாராய் மலைவனம் அரிவையேநேராய்
காடிபுலிசிங்கம் காட்டானைபன்றியும்
திரமுள்ளகோனும் தாவிடும்மந்தியும் தெரி

சீதை தரு

கண்ணில்கண்டேனே மிருககாக்ஷி கடுந்துயர்விண்டேனே
வண்ணமாகமுந்தி பார்த்தவனங்காணேன்
அண்ணலேஎனக்கு அறிவிப்பீர்விபரமாய் கண்

லட்சுமணர் தரு

அறிவிப்பேனம்மா மனம் வாடாதேசும்மா
பரிவுள்ளமுனிவர்கள் பட்சமுடனேகூடி
அரியதவம்புரிவதை அன்னையேபார்நாடி அறி

### சீதை தரு

ஆசிர்மங்கண்டேன் முனிவர்கள் அருள்மொழிவிண்டேன்
வாசியோகியிடம் ஆசிர்வாதம்பெற்றேன்
நேசமாய்சித்திர ஆசிர்மத்தைவிட்டேன் ஆசி

### லட்சுமணன் தரு

அண்ணியேபாரும் தண்டகாவனத்தின் உன்னிதத்தைநீரும்
திண்ணமாய்மாமுனிவர் திகழ்பெரும்வனமிது
குண்ணியேஎன்மனம் எண்ணம்வேறுகுதே அண்

### சீதை முகாரி விருத்தம்

மைத்துனஎந்தனிட மனமதுதான்மகிழ
இத்தனைவனங்களையும் எனக்குமேகாட்டிவந்தீர்
தத்தியேமிருகஞ்செல்லும் தண்டகாரண்யம்வருகும்போது
சித்தமுந்தான்கலங்கி திருமுகம்வாடியதென்ன.

### லட்சுமணன் முகாரி விருத்தம்

அண்ணியேசொல்லக்கேளாய் அயோத்திவாழ்ரசகனுன
வண்ணன் தன்மொழியைக்கேட்டு வனத்திலேவிடவும்சொன்னார்
எண்ணுதஎண்ணியானும் ஏங்கியேஇருந்துநொந்து
புண்ணாகியழைத்துவந்தேன் பிழையதைபொறுத்திடாயே.

### சீதை புலம்பல் தரு

என்னசெய்வேன்எதுசெய்வேன் எந்தன் தலைவிதிவசமோ
சின்னமொழிகேட்கவீணுய் சிதரவைத்தாய்பதியே

கன்னியாள்கலங்கலானேன் சட்டுரையைகேட்டதினுல்
அன்னிதரசகன்சொல்லால் அலையவைத்தாய்பதியே

அன்னாளில்எனைசோதிக்க அக்கினியில்தான்முழுகி
பின்னமின்றிவந்ததினுல் பூரித்தீர்சுரர்மகிழ

வனம்பார்க்கவேண்டுமென்று வஞ்சிநான்கேட்டதற்கு
மனம்நோகஎன்னைவிட்டு வருகும்படிசொன்னீரோதான் எ

### லட்சுமணன் தரு

ஜனகராஜன்மகளே என்தாயேகேளும்நீயே
தவித்துநீபுலம்பவேண்டாம்
தீனதயாபரன் திருவருட்செயற்படி
சுருள் தடமாருயிர் படுமேவதை
கடனேயிது திடமாயிரு ஜன

### சீதை தரு

இளையபெருமாளே என்னை அன்னீதமாய்இந்நாளிலே
இவ்வனத்தில்விடவும்
களைத்துமெய்வாடியே கலங்குதெந்தனுவி
சுருள் கதிர்மாமணி குலமேயொளிர்
பதியாகிய துதிமேவிய இளை

### லட்சுமணன் தரு

சீதாபிராட்டியாளே என் அண்ணிமனக்குண்ணி
சிந்தைகலங்கிடாதே
ஜெகத்தோர்உரைத்திட்ட சிறுபழிநீங்கவே
சுருள் சூதாகவே ரதமேற்றியே
சீதானும் விடவேசொன்னார் சீதா

### சீதை தரு

எப்படி துணிந்திருப்பேன் இளையோரேமனந்தாளேனினி
என்னுயிர்வைத்திருப்பேன்
கப்பியகாட்டினில் கூடியமிருகங்கள்
சுருள் கொன்றுதின்றிடும் நன்றுநன்றென
என்னைக்காண்பதரி தாகுமோஇனி எப்

### லட்சுமணன் தரு

தண்டகாவனத்திலுள்ள என் தாயேகேளும்நீயே
தபசிகள்காத்திடுவார்
அண்டாதொருதீங்கும் அண்ணியேபோய்வாரேன்
சுருள் அரிராகவன் எனையேயெதிர்
பரிவாகவே பார்ப்பாரம்மா தண்

### சீதை விருத்தம்

சொன்னசொல்தவறிடாத சுந்திர இளையகோவே
மன்னவர்நாதருக்கும் மாமியர்மூவருக்கும்
அன்புள்ளவசிஷ்டருக்கும் அரிவையாள் சரணஞ்செய்தேன்
இன்பமாய்அயோத்திநகர் ஏகிடுவீரேநீரும்.

### லட்சுமணன் தரு

காரிழைசீதையைகானில் விட்டேகையில்
கால்பின்னுதென்னசெய்வேன் ராமாராமா

### சீதை தரு

தேரோடிபுரவியை தீரமாய்தட்டியே
சென்றீரேஇளையவர் தெய்வமே

லட்சுமணர் தரு

அன்னைசீதையவள் அடவியில்தனித்துமே
ஐயோதுன்பம்கொள்ளுவாள் ராமாராமா

சீதை தரு

என்னைவனத்தில்விட்டு ஏகஇளையவர்க்கு
எப்படிவந்ததோமனம் தெய்வமே

லட்சுமணர் தரு

கானகத்தில்வாழும் கன்னிதேவதைகளா
காத்துரக்ஷிப்பீரோ கன்னியாள்சீதையை

சீதை விருத்தம்

மனமதுதான் துணிந்து மங்கையாள்எந்தனையே
வனத்திலேவிட்டிளையோன் விரைவுடன்அயோத்திசென்றார்
துணையதையாருங்காணேன் துடிக்குதேநெஞ்சமையோ
வனத்தில்வாழ்தேவதையே வந்தெனைகாத்திடீரே.

பொது வசனம்

லட்சுமணர் ஸ்ரீராமரைப்பார்த்து சொல்லுகிறவிதங் காண்க.

லட்சுமணர் கவி

வானவர்புகழுமண்ணா வாக்கதுதவறிடாமல்
பானொளிதேரிலேற்றி பாவையாள்சீதைமாதை
கானகந்தன்னில்விட்டு கடுகியேயோடிவந்தேன்
ஏனோவிசனங்கொண்டீர் எனக்கதையுரைத்திடீரே.

ஸ்ரீராமர் தரு

வனத்தில்விடும்போது வஞ்சியாள்சீதையும்தம்பி அவள்
மனம்நொந்துசொன்னதோர் மொழிகளைச்சொல்லுவாய்தம்பி வன

லட்சுமணர் தரு

என்னநான்சொல்லுவேன் என்மனம்வாடுதேஅண்ணா மாது
கண்ணீர்விட்டழுதால் வின்னங்கள்நேருமோஅண்ணா என்

ஸ்ரீராமர் தரு

சிந்தைநொந்துபலசேதி யென்னசொன்னாள்மாது அதை
குந்தகமில்லாமல் எந்தனுக்குநீயும்ஓது சிந்

லட்சுமணர் முகாரி விருத்தம்

சொல்லுவாய் என்றுரைத்த அண்ணாகேளாய்
சீதையைநான் கானகத்தில் விடும்போது

கல்லுருக மாமுருக கண்ணீர்விட்டு
கைசோர்ந்து மெய்சோர்ந்து அலம்பிவாடி
வில்லவா உமக்குமே சரணமென்றும்
விற்குரு வதிஷ்டருக்குச் சரணமென்றும்
நல்லதோர் மாமிகட்குச் சரணமென்றும்
நானுரைத்தபடி யவர்க்குச் சொல்வாயென்றாள்.

## போது வசனம்

அகோதெப்படியென்றால் ஸ்ரீராமரும் லட்சுமணரும் வார்த்தை யாடிக்கொண்டு இவர்கள் இங்கிருக்க தண்டகாரண்ய வாசியாகிய வால்மீக மகாமுனிவர் சீதையை காணும்படியாக கொலுவை நாடி வருகிறவிதம் காண்க.

## வால்மீகர் வருகிற விருத்தம்

தண்டுளபமாலையணி துதிக்குஞ்சீலன்
தொண்டர்பலர்தாளடியை தொழுதுபோற்ற
கெண்டைவிழிசீதையாள் கலக்கமாற்ற
வேண்டுமெனவால்மீகர் வருகின்றாரே.

## வால்மீகர் தரு

வால்மீகமகாமுனிவர்வந்தார்
வேதவிகிதஞகியபோதன்
வால்மீகமகாமுனிவர்வாரார்

பால்போன்றவெண்ணீறை பாக்கநெற்றியில்பூசி
சுருள் பேசரிதாகிய பரமனைக்கண்ட
நேசரிவரென தாசருமண்ட வால்

நித்தமும்சிவபூசை பத்திபுரியக்கற்றோன்
சுத்தமெஞ்ஞானியாய் தத்துவாதீதசுத்தோன்
சுருள் சூக்ஷமகாண ஸ்தூலசரீர
சாக்ஷிஆத்ம நிலையையறிய வால்

காஷாயஉடையுடுத்தி கமண்டலங்கையிற்கொண்டு
பூஷணம்ருத்ராக்கமாலை யெனவேபூண்டு
சுருள் பூதலத்தோர் புகழ்சாதுஇவரென
வேதம்மொழிபல வோதிரமென வால்

ஜானகியாள்கொண்டசித்தங் கலக்கங்கண்டு
ஆனமொழிகளாலே அவள்துன்பம்மாற்றவிண்டு
சுருள் அவசரமாயதி வேகமாயோடி
புவனம்நடுங்கிட வருகிறேன்நாடி வால்

0-,8..2 N56

வால்மீகர் கவி

சரணமென் றடிபணிந்த சிஷியரேசொல்லக்கேளீர்
பாமனேகோரிமிக பூசையும்முடிக்கவேண்டும்
திரமுடன்பூங்காவனம் சுற்றியேபார்த்துநாமும்
அரிதானபுஷ்பங்கொய்து அதிசீக்கிரம்வருகுவோமே.

சீதையம்மன் புலம்பல் தரு

இந்தவிதிக்கென்னசெய்வேன் சிந்தைநொந்துகானகத்தில்
ஏந்திழைதவிக்கலானேன் தெய்வமே
எந்தனைதனித்துவிட்டு எப்படிமனதுவந்து
ஏகினரோஇளையோன் தெய்வமே
வண்ணான்சொல்லைநிசமென்று எண்ணியேரகுநாதன்
வனத்தில்விட்டுத்துணிந்தார் தெய்வமே
பண்ணவமுனிவர்தேவர் பாரெங்குந்தானறிந்து
பழுதாய்எனைநினைப்பார் தெய்வமே
தண்டகாவனத்திலுள்ள தபசிமுனிவரைக்கூட்
தபஞ்செய்யக்காண்கிலேனே தெய்வமே

வால்மீகர் விருத்தம்

ஆரம்மாஇவ்வனத்தில் ஆதிலக்ஷிமியைப்போல
சீரதுஉடையநல்ல சுந்தரமுள்ளதாயே
கூரம்மாயுந்தனுக்கு குற்றந்தான்வந்ததென்ன
பேரம்மாஇன்னதென்று பிரித்துரைசெய்குவாயே

சீதை விருத்தம்

ஆரெனவென்றுகேட்ட அருந்தவமுனியேகேளீர்
சூரியகுலத்துதித்த சுந்தரராமச்சந்திரன்
பாரியாள்நானேயாகும் பன்னியாசகன்சொல்லால்
சீரியேகானில்விட்டார் சிந்தையுங்கலங்கலானேன்.

வால்மீகர் தரு

சிந்தைநொந்துவாடவேண்டாமே
சிந்தைநொந்துவாடவேண்டாமே
எந்தனிடஆசிரமம் எழுந்துவருவாய்தாயே
உந்தனைபாதுகார்ப்பேன் ஒருதுன்பம்அணுகிடாமல்
சுருள் உம்பர்கள்மெச்சிடும் உலகமாதாவே
அம்புவியோர்க்கருள் புரிந்திடும்சீதே சிந்

சீதை தரு

அருந்தவமுனியேகேளுமே கோபங்கொள்ளாமல்
அருந்தவமுனியேகேளுமே

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 103511 MADRAS

திருத்தமாகஎனக்கு தெரிவிப்பீர்உமதுபேரை
வருத்தம்மிகக்கொள்ளாமல் வருவேன் ஆசிர்மம்சிரே
சருள் வானவர்சித்தரோ நானறியேனே
தானவனுல்முன் தியங்கிகின்றேனே அ

## வால்மீகர் தரு

சந்தேகம்நீர்கொள்ளவேண்டாமே அம்மம்மாதாயே
சந்தேகம்நீர்கொள்ளவேண்டாமே
இந்தவனந்தனிலே இருந்துதவம்புரியும்
எந்தன்பேர்வால்மீகர் ஏந்திழையேதெரியும்
சருள் ஏனோவிசனங் கொள்ளாதேதாயே
நானுன்னைகார்ப்பேன் நம்பிடுவாயே ச

## சீதை தரு

அன்னைதந்தைநீரேயாகுமே இன்றுநாள்முதல்
அன்னைதந்தைநீரேயாகுமே
கன்னியாளுங்கெற்ப வதியாய்இருப்பதினுல்
பின்னுல்எனக்குத்துணை யுண்டோஆசிர்மந்தன்னில்
சருள் பேதமில்லாமல் யோதுவீரையா
மாதிதோஆசிர்மம் வந்தேனேதுய்யா அ

## வால்மீகர் கவி

அம்மணிதாயேகேளும் ஆசிர்மம்இதுவேயாகும்
செம்மையாய்உனக்குஏற்ற சேயிழையிருக்கின்றூர்கள்
உம்மையேபாதுகார்ப்பார் ஒருதுன்பமும்அணுகிடாமல்
எம்பிரான் துணை இருப்பார் எத்துன்பம்அணுகிடாது.

## பொது வசனம்

இவ்விதமாகத்தானே வால்மீகர் ஆசிர்மத்தில் சீதையம்மன் இருந்து வருகிறகாலத்தில் மாதம் பத்து சரியானபடியால் கெற்ப வேதனைப்படுவது.

## சீதை தரு

என்னூரன்செய்வேனடிகன்னிகளா அம்மாகன்னிகளா எனக்கு
இடையுமெத்தநோகுதடிகன்னிகளா

இடிக்குதடிசிசுவயிற்றில்கன்னிகளா அம்மாகன்னிகளா எந்தன்
இருதயம்நோகுதடிகன்னிகளா

மடியகாலம்வந்துதோடிகன்னிகளா அம்மாகன்னிகளா எனக்கு
மயக்கம்மெத்தகாணுதடிகன்னிகளா

செல்வமாகநான்வளர்ந்துகன்னிகளா அம்மாகன்னிகளா இங்கு
சீரழியகாலமாச்சேகன்னிகளா

சீதை தரு

செல்வன்பிறந்தானம்மா தெள்ளுமணிபோல
செல்வன்பிறந்தானம்மா

செல்வன்பிறந்தானம்மா சீர்மிகுஸ்ரீராமரைப்போல்
தொல்புவியோர்மெச்சும் தூயஅயோத்தியாள செ

கண்ணழகும்மூக்கழகும் காசாம்புமெய்யழகும்
மண்ணில்கிடையாதே மைந்தனைப்போலபாலன் செ

வாசியோகமேசெய்யும் வால்மீகமுனியேசுவாமி
பாசமுள்ளசெல்வனைப் பாருங்கண்ணினால்நேமி செ

வால்மீகர் விருத்தம்

சித்தமும்மகிழ்ந்தேனம்மா செல்வனைக்கண்ணில்கண்டு
உத்தமியானதாயே ஓகோநீதடாகம்சென்று
சுத்தமாய்ஸ்நானம்செய்து சுகமுள்ளஜலந்திரட்டி
பத்தியாய்வந்திடுவாய் பாலனுக்குபெயர்வகுப்போம்.

சீதை தரு

பாலனைதொட்டிலிலே மாது பாசமாய்நான்கிடத்தி
சீலமாய்ஜலம்மெள்ள மாது சீக்கிரம்நதிக்குச்சென்றாள்
தங்கக்குடமெடுத்து மாது தாவிநடைநடந்து
கெங்கையில்ஜலம்மெள்ள நல்ல கன்னியும்தானடந்தாள்
செல்வனும்தொட்டிலிலே அவன் தேம்பித்தேம்பியழவே
பொல்லாங்குநேருமென்று கேட்டு பூவையும்யோடிவந்தாள்

சீதை விருத்தம்

பிள்ளையும்அழுகுஞ்சத்தம் பூவையாள்காதில்கேட்டு
துள்ளியேதுடிதுடித்து துன்பங்கள்நேருமென்று
மெள்ளவேயோடிவந்து மைந்தனைமடியிலேந்தி
சள்ளைகளில்லாமலே ஜலந்திரட்டநடந்திட்டாளே.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சீதை மைந்தனை தூக்கிக்கொண்டு ஜலந் திரட்ட நதிக்குச் சென்றிருக்கையில் செபத்திலிருந்த வால்மீகர் கண் விழித்துப்பார்க்க தொட்டிலில் இருந்த பிள்ளையைக் காணமல் விசனப்படுகிறவிதம் காண்க.

வால்மீகர் தரு

சீதையின்மைந்தனைக்காணேனே
தீங்குகள்நேருமோதோணேனே

மாதுசீதைவந்துமகன் எங்கேயென்றாலே
சாதுவன்வாடியே திகைப்பேனேபின்னாலே சீ

ஐயையோ இதுஎன்னமோசம் செபத்தில்
ஆகாநான்இருந்தேனேபாசம்
பையவேபுலிசிங்கம் பாலனைக்கொன்றதோ
தெய்வமேஎன்செய்வேன் தீவினைநேர்ந்ததே சீ

வால்மீகர் விருத்தம்

செல்வனும்எங்கேயென்று சீதையும்கேட்பதற்குள்
நல்லதோர்தெர்ப்பைகிள்ளி நலந்தருமந்திரமோதி
வல்லமைபாலனுக்கி விளையாடதொட்டிலில்போட்டு
சல்லாபமாகயாட்டி செபத்தினில்துங்கிட்டேனே.

பொது வசனம்

சீதைக்குத் தெரியாமல் வால்மீகர் தெர்ப்பையைக்கிள்ளி பாலனுகச்செய்து தொட்டிலில்போட்டு செபம் செய்துக்கொண்டு இருக்கும்போது நதிக்குச்சென்ற சீதைவந்து பாலகனைப் பார்த்து ஏதென்று கேட்பது.

சீதை கவி

சாதுவேஎந்தனிடசெல்வனை எடுத்துச்சென்றேன்
எதிர்ந்தசெல்வன்தானும் இருக்கின்றான்தொட்டிலில்இப்போ.

வால்மீகர் கவி

சீதையேஉந்தனிட செல்வனும்இவனுமென்று
பாதுகார்த்திடுவாயம்மா பாலகர்களைநீயும்.

சீதை தரு

சந்தோஷங்கொண்டேனேசுவாமி சிறு
தனையர்களைக்கண்டுநேமி
விந்தையதாகவே மெல்லியும்வளர்க்கிறேன்
சொந்தமாய்பெயர்வைப்பீர் சிந்தையும்களிக்கிறேன் சந்

வால்மீகர் தரு

குசலவன்லவனென்றுபேரு அம்மா
கூறினேனேமிகசீறு
திசையெங்கும்புகழ்பெற்று தீரனாய்இருப்பாரே
தசரதன்பேரனென்று தாணியோர்மதிப்பாரே குச

சீதை விருத்தம்

மாதவமுனியேகேளீர் மைந்தர்க்குவயது ஆறு
தீதில்லாஆனதாலே தீரஸ்ரீராமரைப்போல்

வேதங்களுணரவேண்டும் விண்ணவர்மகிழும்வண்ணம்
ஆதாரவானவித்தை அன்புடன்கற்றுதாரும்.

வால்மீகர் வசனம்

அப்படியே தனுர்வேதம் போதிக்கின்றேன். மைந்தர்களை அழைத்துவாருமம்மா சீதாங்கனியே.

## குசலவன் வருகிற விருத்தம்

சீலமுள்ள அன்னையாள் அழைத்தசேதி
சேயனும் மகிழ்ச்சியுடன் காதில்கேட்டு
சாலவே மணிமுடி யலங்கரித்து
சரப்பளி பதக்கமது மார்பிலாட
காலினில் அணிந்ததண்டை கீதம்பாட
காயாம்பு மேனிமுகம் பளபளென்ன
கோலமாய் வனப்பெண்கள் கவரிவீச
குசலவன் கொலுவாக வருகின்றானே.

குசலவன் தரு

குசலவராஜதீரன்வந்தேன் நல்ல
கொஞ்சியகவரிகள்வஞ்சியர்வீச
குசலவராஜதீரன்வாரேன்

குசலவராஜன்வந்தேன் கொஞ்சும்அன்னையைக்காண
சுருள் கோரிய மன்மதன் போலழகுற்றவன்
பாரினில்புகழ் தீரனுய்கற்றவன் குச

தட்டிச்சல்லடங்கச்சைபூண்டு எங்கும்
தடதடவென்றுமேபடிமிசையதிர்ந்திட
குட்டிச்சிங்கத்தைப்போலவெகுண்டு

சிட்டிகொண்டைகுலுங்க சித்திரமகுடம்மின்ன
சுருள் சிந்தைகளித்திட அந்தரதேவர்கள்
சுந்தரனென்ன விந்தையாமூவர்கள் குச

காலிலணிந்ததண்டைகொஞ்ச கீதம்
கலகலவென்றுமேகலந்தருமுத்து
மேலும்பணிகளாம்மிஞ்ச

ஆலவிஷத்தையுண்ட ஆண்டவன்பாதங்கோரும்
சுருள் அருந்தவவால்மீகர் ஆசிகள்கூற
பெருந்தவமுனிவர்கள் போற்றியேதாழ குச

செம்மங்குப்பம்நகரில்வாசன் நல்ல
சீர்பெருஞ்சான்றோர்குலமதிலுதித்த
பேர்பெருகுஞ்சண்முகதாசன்

நம்பியேஜயா அவர் நடித்திடகேட்டபடி
சுருள் நலம்பெறநாடக மாகவேபாடினேன்
புலவர்கள்சீர்பிழை திருத்தவேதேடினேன் குச

## லவன் வருகிற கவி

உலகினில்புகழ்படைத்த உத்தமவால்மீகர்
நலந்தரும்மந்திரத்தால் நாடியேயுதித்தபாலன்
பலவிதபணிகள்பூண்டு பாவையர்கவரிவீச
லவகுமாரதீரன் நற்சபைவருகின்றனே.

## லவன் தரு

முத்துக்குல்லாய்சிரசில்பூண்டு ரத்தினபணிமார்பிலாட
எத்திசையுந்தானதிர லவனெனும்தீரன்வாரேன்
வனப்பெண்கள்கவரிவீச வானவர்மகிழ்ந்துபேச
வாசனைபரிமளிக்க வாரானதிவேகமாக
சல்லடமுங்கச்சையிட்டு சாலுவையங்கியுந்தொட்டு
வல்லமையில்மிகுந்ததீரன் வாரானதிவேகமாக
காலினில்தண்டைகொஞ்ச கனத்தபணிமார்பில்மிஞ்ச
சீலமுள்ள அன்னையைக்காண சுந்தரனும்வந்தேனேடி மு

## குசலவர் கவி

வேதமாமறைகள்தன்னை விளங்கவேதானுணர்ந்த
போதனேஉமதுதிரு பொற்பாதகமலங்கட்கு
கோதில்லாமல்விசைமுல்லை கொண்டுமேபணிகள்சாற்றி
பாதத்தில்போற்றிசெய்தோம் பாலரைகாத்திடீரே.

## வால்மீகர் கவி

பத்தியாய்பணிந்துநின்ற பாலரேசொல்லக்கேளீர்
மெத்தவேயுலகின்கண்ணே மேன்மையாய்வாழ்ந்திருப்பீர்
உத்தமதனுர்வேதத்தை உரைத்திடவுங்களுக்கு
சித்தத்தில்எண்ணங்கொண்டேன் சேதிகளறிகுவீரே.

## குசலவர் தரு

செந்தமிழுலகினில் என்றமெட்டு

அந்தணகுலமதில் வந்திட்டசுந்திராகீர்
அந்தநல்லதனுர்வேதமே உலகின்கண்ணே
தந்ததார்பிரதாபமே
அதுபெரும்முறையதை ததியிதுபுரிந்திட
மதுரமொழிபுகல் உமதுதிருவாக்கால்
அருளுவீரடிபணிந்தோம் உமதுதிரு
அருள்பெறநாடியேவந்தோம் அக்

### வால்மீகர் தரு

இத்தரைமன்னர்க்கெல்லாம் சித்திமிகுந்தவிஸ்வா
மித்திரனலேநன்னூலாய் அரசர்க்கெல்லாம்
நத்திபாலித்தசெங்கோலாய்

கடமிட்டபடிதனி லடமிடுகொடியவர்
திடமும்வரமும் அரவேகொய்து

சித்திபெறவேஆட்சிகள் மன்னர்கள்பெற
செய்தார்அனேகருக்ஷிகள் இத்

### குசலவர் தரு

வேதமறிந்தகுரு நாதனேதனுர்வேதம்
ஆதரவோடுஎன்னென்ன ஆயுதவகை
சாதனைசெய்யும்முன்னென்ன

மந்திரமுறையதை தந்திடுமதுபெற
சிந்தைமகிழவரும் திருமறைவேதன்

எந்தனற்றேவனேசொல்வீர் இன்னமென்ன
போதனைதன்னையேபுகல்வீர் வேத

### வால்மீகர் தரு

முக்தம்முக்தம்முக்தா முக்தம்யந்திரமுக்தம்
அஸ்த்திரம்நான்குவிதமே அதனிற்சொல்லும்
மந்திரமூர்த்திபேதமே

அதைநிறைமனதொடு குருவருளாலறிந்து
நிதமும்பெறவு மணியுஞ்சகுனம்

எதிரியைவெல்லும்முறையும் பெரும்மந்திரம்
மாறுபாடில்லாதவையும் முக்

### குசலவர் விருத்தம்

நல்லதுமுனியேகேளீர் நவின்றிடும்வசனம்தன்னை
வல்லமையாய்தனுர்வேத விபரத்தையறிந்துகொண்டோம்
புல்லுவீர்இன்னம்வேறு புரவலர்தன்னைவெல்லும்
நல்லநேதார்வேதமுண்டோ நவிலுவீர்நவிலுவீரே.

### வால்மீகர் விருத்தம்

பெருமையுள்ளதனுர்வேதத்தை பாலரேநீங்களுந்தான்
அருமையாய்கற்றுக்கொண்டீர் ஆதலால்உங்களுக்கு
திருத்தமாய்இன்னம்வேறு தேடிவந்தடையும்பாணம்
கருத்ததையுரைக்கின்றேன் கவனமாய்கேட்பீர்தானே.

## பொது வசனம்

அகோர்தெப்படியென்றால் வால்மீகர் பாலர்களுக்கு வித்தை கற்பித்து கொடுத்து வருகிற காலங்களில் வதிஷ்டமுனிவர் அயோத்தியை நாடி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைக் காணும்படி வருவது.

## வதிஷ்டர் வருகிற கவி

காத்தினில்தண்டுங்கொண்டு காவிவேஷ்டிதரித்து
திருத்தமாய்தெர்பைபுல்லுஞ் செபமாலைநீறணிந்து
பெருந்தவமுனிவரெல்லாம் போற்றியேசிரம்வணங்க
விரைவுடன்அயோத்திநாடி வதிஷ்டரும்வருகின்றாரே.

### வதிஷ்டர் தரு

பதியில்புகழ்பெற்ற கதிர்குலகுருவான
வதிஷ்டமுனியும்தோன்றினார் கொலுவைநாடி
வதிஷ்டமுனியும்தோன்றினார் ப
காவியாடைபூண்டு கமண்டலங்கரங்கொண்டு
தாவிநடைநடந்து சந்தோஷமொழிவிண்டு ப
தத்துவமறைகளை மெத்தயுணர்ந்தவர்
சுத்தமாய்பரமனை சித்தத்திலறிந்தவர் ப
காதில்குண்டலம்மின்ன கப்புஞ்சடைகுலுங்க
ஆதிசிவனேயென்று அரனைமனதில்கோரி ப

### ஸ்ரீராமர் தரு

வேதாசரணம் கதிர்குல போதாசரணம்
வேதாயுந்தன்திரு பாதபுயந்தன்னில்
சீதானும்துதி செய்தேன்காருமென்னை வே

### வதிஷ்டர் தரு

வாழ்குவாய்ராமா சுக மாகநீபூமா
வாழ்குவாய்இனியொரு தாழ்வுநேராமலே
ஆழிசூழுலகில் அதிபதியாகவே வா

### ஸ்ரீராமர் தரு

என்னநான்செய்வேன் சுவாமி எவ்விதம்உய்வேன்
துன்பங்களடைந்துநான் தொல்லைபடலானேன்
கன்னிசீதையால்மனங் கலங்கிவாடலானேன் எ

### வதிஷ்டர் தரு

கோதண்டாஎன்ன விசனங் கொள்ளாதேமன்ன
யோதுவாய்யெனக்கு யுண்மையுள்ளசேதியை
தீதுகளில்லாமல் தெரிவிப்பேனேதியே கோ

### ஸ்ரீராமர் விருத்தம்

சிந்தையி லிருக்கின்ற வருத்தம்தன்னை
செப்புவேன் கேளும்குரு நாதாநீரும்
முந்திநான் சீதையை மீட்டுமேவருவதற்கு
மூர்க்கமுள்ள அரக்கர்கள் தனைமடித்தேன்
அந்ததோர் பாவங்களை தொலைப்பதற்கு
அரசாக்ஷியை தம்பியிடம் ஒப்பிவைத்து
சொந்தமாய் வனத்துக்கேகி தவங்கள்செய்ய
சுந்திரனும் எண்ணங்கொண்டேன் விடையளிப்பீர்.

### வதிஷ்டர் விருத்தம்

துன்பமேகொள்ளவேண்டாம் தூயகுணராமாகேளாய்
மன்னியேராக்ஷதர்களை மடித்ததோர்பாவந்தீர
பன்னியேஅஸ்வயாகம் பாரெங்கும்கொடிபெற்றோங்க
அன்புடன்முடிப்பாயாகில் அரக்கர்க்குமோக்ஷமுண்டு.

### ஸ்ரீராமர் தரு

சந்தோஷங்கொண்டேனேமாமுனி அஸ்வ
யாகத்தைசெய்யவேநானினி
எந்தனுக்குரைப்பீர் இன்னவிதமென்று
சுந்தரன்பொருளை சேகரிப்பேன்நன்று ச

### வதிஷ்டர் தரு

பஞ்சகல்யாணிகுதிரைகள்வேண்டுமே இன்னம்
பலபொருள்சேகரிக்கதூண்டுமே
கொஞ்சுநல்மொழியான கோதையாள்சீதையை
சஞ்சலம்நீங்கவே தானழையும்பேதையை ப

### ஸ்ரீராமர் தரு

வனத்தில்விட்டசீதைஇறந்தாளோ மன
வருத்தத்தினால்மனம்நொந்தாளோ
மணந்துணிந்துசீதை மாதைநான்அழைத்தாலே
அனைவர்க்கும்பழிப்பாகும் இனிமேலே வ

### வதிஷ்டர் தரு

அன்னைசீதையில்லாவிட்டாலே அஸ்வ
யாகம்முடியாதினிகெட்டாலே
பின்னங்கள்நேருமே மன்னனேயோசிப்பாய்
பன்னினேன்சுருதியை பலதாரம்வாசிப்பாய் அ

### ஸ்ரீராமர் கவி

மிஞ்சினகாரியத்திற்கு மன்னனும்என்னசெய்வேன்
கொஞ்சியேசிதையைப்போல் குறையில்லாதங்கத்தாலே
ரஞ்சிதமாகசெய்து ராஜர்கள் தான்மகிழ
அஞ்சாமல்அஸ்வயாகம் அன்புடன்முடித்திடீரே.

### வதிஷ்டர் கவி

செப்பியபடிக்குயாகம் சீதராமுடிக்கவேண்டி
தப்பாமல்அதற்குவேண தகுந்ததோர்பொருள்களோடு
மெப்பானபடைகள் தன்னை மிக்கவேதயார்செய்ய
துப்பானஅனுமான் தன்னை சீக்கிரம்கொண்டுவாராய்.

## அனுமார் வருகிற கவி

படைகளை தயார்செய்ய பரிதிகுலராகவன் தான்
அடைவுடன்அழைத்தசேதி அறிந்திடமனதில்கொண்டு
துடக்குடன்தானெழுந்து தண்டதைகரத்தில்தாங்கி
திடமுள்ளஅனுமந்த தீரனும்வருகின்றனே.

### அனுமார் தரு

#### பல்லவி

அரிராகவன் தூதன்வந்தனனே — அனுமந்தபாலன்
அரிராகவன் தூதன்வந்தனனே

#### அநுபல்லவி

அரிராகவன் தூதன்வந்தேன் — அண்டபுவனமும்கிடுகிடென்றிட
பரிவாய்திசைபாலரொடுங்கிட — பன்னகசேஷன் திடுக்கிட

#### சரணங்கள்

பிண்டிபாலாகரத்தில்தாங்கியே — மலைகளை
துண்டுதுண்டாய்வாரியோங்கியே
கண்டுமோராக்ஷதர்கள் — கவலையுடன் தானொளிக்க
அண்டர்முனிவரெல்லாம் — அதிபலனென் றுகளிக்க
சுருள் ஆதிதேவனும் — சோதிமழுங்கிட
நீதில்லாக்கடல் — ததும்பிபொங்கிட — அனு

அன்னைசீதைதன்னைத்தேடியே — லங்கைசெல்ல
அலைகடலைபாய்ந்தேன்நாடியே
இன்பமாய்அசோகவனம் — ஏகியேதாயைக்கண்டு
அன்புடன்மொழிவிண்டு — அஸ்தகணையாழிகொண்டு
சுருள் அக்கினியை — திக்குதிக்காய்
மிக்கவே — மீட்டிவந்த — அனு

இந்திரசித்துயாகத்தைகெடுத்தேன் அவனோடுவந்த
இராக்ஷதர்களையேமடித்தேன்

சுந்தரராமச்சந்திரர் சிந்தையும்மகிழ்ச்சிகொண்டு
எந்தனையழைத்தவிதம் இன்னதென்றறியக்கண்டு

சுருள் ஏகபோக மாகவோடி
நாகரீக மாகநாடி அனு

## அனுமார் விருத்தம்

அண்டர்மாமுனிவர்தேவர் அனுதினம்தொழுதுபோற்றும்
கொண்டல்திருமேனி கோதண்டபாணியேயுன்
தண்டுளபமாலையணிந்த திருவடிதன்னில்யானும்
தொண்டனும்போற்றிசெய்தேன் தூயவாகாத்திடாயே.

## ஸ்ரீராமர் விருத்தம்

வந்தனம்செய்துநின்ற அனுமந்தாவாழிவாழி
மந்திரஅஸ்வயாகம் மன்னனும்முடிக்கவேண்டி
சிந்தையில்கொண்டதாலே சீக்கிரம்லங்கைநாடி
சுந்தரவிபீஷணருக்கு சொல்லியேவருகுவாயே.

## அனுமார் சிந்து

விடைபெற்றுஅனுமந்தனும் சந்தோஷமாய்
விண்ணுலகம்மண்ணுலகம்தானதிர

நடந்தான்கிஷ்கிந்தைக்கு சுக்கிரீபனிடம்
நாரணனுரைத்தசேதிதானுரைக்க

கண்டான்அங்கதனை சேதிகூறி
கங்குலானகிஷ்கிந்தை தன்னையேவிட்டு

தண்டைதகரத்தில்கொண்டான் வேகமாய்
தாவியேமயேந்திரகிரி பர்வதம்வந்தான்

விஸ்வரூபம்தனையெடுத்தான் அரிகரியென்று
விண்ணுலகம்மண்ணுலகம் தானதிர

பந்துபோலதான்கிளம்பி அனுமந்தன்
பவழமலைதீவில் வந்துகுதித்தான்

சிந்தைமகிழ்ச்சியுடன் அங்கிருந்து
தீரமாய்பாய்ந்துலங்கை வந்தமேசேர்ந்தான்
தந்தினம் தனதனனதனன.

## பொது வசனம்

இவ்விதமாகத்தானே அனுமந்தன் வருகிறசேதி விபீஷணருக்குத் தெரிந்து கொலுவரக வருகிறவிதம் காண்க.

## விபீஷணர் வருகிற விருத்தம்

வண்ணமாய் அனுமந்தன் வருகின்றசேதி தன்னை
திண்ணமாய்காதில்கேட்டு தீரனும்தானெழுந்து
மண்ணளந்தோன்பாதங்கோரி மணிமுடியலங்கரித்து
விண்ணவர்மனங்களிக்க விபீஷணர்வருகின்றாரே.

### விபீஷணர் தரு

வேதமறைகள் தன்னை நீதியுடனுணர்ந்த
விபீஷணரும்வந்துமேவினார் நல்ல
விந்தையதாகவேசுந்தரதீரன் விபீ

மாதவன் திருவடியை மனதில்மறவாதீரன்
சுருள் மங்களநிர்த்தன மாதர்களாட
மாதர்களிருபுறம் சாமரைபோட வே

மந்திரிமார்கள்மிக்க மனுநீதியுரைத்திட
அந்தண இருடிகள் ஆசிகள் வதித்திட
சுருள் அன்புடன்பல ராஜர்கள்வணங்கிட
இன்பமாய்தேவர்கள் யாவரும்புகழ்ந்திட வே

### அனுமாரிடம் விபீஷணர் தரு

வந்தனம்வந்தனம்அய்யனே அனுமந்ததேவா
வந்தனம்வந்தனம்அய்யனே

வந்தனம்உமதுபாதம் சுந்தரன்போற்றிசெய்தேன்
விந்தையாய்ஆசனத்தில் வீற்றிருப்பீரய்யனே வந்

### அனுமார் தரு

வந்தனம்புரிந்தசுந்தரா சுகமாகநீவாழ்குவாய்
வந்தனம்புரிந்தசுந்தரா

உந்தனைநாடிஇன்றவந்த சேதிகள் தன்னை
சிந்தைமகிழ்ச்சியாய் தெரிவிப்பேன்கேள்முன்னே வந்

### விபீஷணர் தரு

தெரிவிக்கும்சேதிகள்என்னமோ அனுமந்தாநீரும்
தெரிவிக்கும்சேதிகள்என்னமோ

ஹரியான ஸ்ரீராமர் அனுப்பினரோசேதி
அன்புடன்இன்னதென்று அறிவிப்பீரேயோதி தெ

### அனுமார் தரு

அஸ்வயாகம்செய்யவே ஹரிராகவன்தானும்
அஸ்வயாகம்செய்யவே

அஸ்வயாகம்செய்ய ஆகாஉம்மையோடி
கஸ்தியில்லாதழைத்தார் காருத்தன்மிகதேடி அ

விபீஷணர் கவி

அப்படியானல்சரி அஸ்வயாகம்செய்வதற்கு
செப்பியோராமர்மொழி தள்ளாமல்இன்றுயானும்
கப்பியேதண்டுதளம் கரிபரிசேனையோடு
தப்பாமல்வருகிறேன் தைரியமாய்செல்லுவீரே.

அனுமார் தரு

மன்னன்விபீஷணனிடத்தில் விடையும்பெற்றுமே
மாய்கையானலங்கைநகர் விட்டுமேநடந்தார்
விண்ணுலகம்மண்ணுலகம் தானதிரவே
விஸ்வரூபம்தனையெடுத்தேன் மனங்களிக்கவே
பந்துபோலதான்கிளம்பி படபடென்றுமே
விந்தையாகசமுத்திரத்தை தான்கடந்தானே மன்

விபீஷணர் தரு

செல்லுவோம்வாரீர் அயோத்திநகர்
செல்லுவோம்வாரீர்
செல்லுவோம்நாமுமே சித்திரவிமானமேறி
நல்லசேனைகளோடு நாமும்மனந்தேறி செ
சுந்தராராமரை தெரிசனங்காணவே
விந்தையாய்செல்லுவோம் வருகுவீர்தோணவே செ

பொது வசனம்

அகோதெப்படியென்றால் விபீஷணர் அநேக சேனைகளைக் கூட்டிக்கொண்டு புஷ்பவிமானமேறி அயோத்திநகர்வந்து ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைப் பார்த்து சரணமடைகிறவிதங் காண்க.

விபீஷணர் விருத்தம்

அருந்தவமுனிவர்தேவர் அனுதினம்தொழுதுபோற்றும்
கருமுகில்வண்ணுவுந்தன் கழலடிபோற்றிபோற்றி.

ஸ்ரீராமர் விருத்தம்

திருவடிபணிந்துநின்ற தொண்டனேவாழிவாழி
பெருமையாய்யாகந்தன்னை புனிதனேமுடித்திடாயே.

வதிஷ்டர் கவி

உத்தமஸ்ரீராமாகேளாய் உரைத்தநான்வாக்குபோல
சித்திராபர்வம்நவமி திங்களும்வந்ததின்று

பத்தியாய்யாகஞ்செய்து பாரோர்கள்அறியும்வண்ணம்
சத்துருக்கனோடுசேனை தயார்செய்துஅனுப்புவாயே.

வசனம்

ஆனல் கேளும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியே! நான் உரைத்த வண்ணம் சித்திரைமாதம் சித்திராபர்வம் நவமிதிதி இன்றையதின மானபடியால் அஸ்வயாகம் செய்வதற்கு இன்றுமுதல் துடங்க வேண்டும். உன் தம்பி சத்துருக்கனோடு சேனைகளைக் கூட்டி அனுப்பி அம்புவி நாலுதிக்கும் ஜெயம்பெற்று மன்னர்களிடத்தில் கப்பம் வாங்கி அஸ்வயாகத்தை நடத்திவரும்படி திட்டம் செய்குவாய் ராஜனே.

ஸ்ரீராமர் விருத்தம்

தம்பிசத்துருக்காநீதான் சதுரங்கசேனையோடு
அம்புவிநாலுதிக்கும் அஸ்வத்தைதான்செலுத்தி
செம்மையாய்அரசர்கள் செலுத்தியகப்பம்வாங்கி
நம்மிடஅயோத்திநகர் நாடியேவருகுவாயே.

சத்துருக்கன் தரு

வாருங்கள்வாருங்கள்வீரரே நல்ல
வல்லமையில்மிகுந்த தீரரே

ஏறுங்கள்அவரவர்ரதத்திலே இப்போ
ஏகிவருவோம்ஒருக்ஷணத்திலே

ஆனைபரிசேனையோடுசெல்லுவோம் இந்த
அகிலத்தில்எதிர்த்தோரைவெல்லுவோம்

சேனைகள்தன்னையேகூட்டுவீர் தோளில்
திடமுடன்வில்லையேமாட்டுவீர்

சத்துருக்கன் விருத்தம்

மன்னரேசொல்லக்கேளீர் மட்டில்லாவீரர்தன்னை
பன்னியேஜெயம்பெற்று பார்முழுதும்சுற்றிவந்தோம்
இன்னமும்கீழ்த்திசை ஏகியேஅங்குநாமும்
மன்னர்கள்தனைசெயித்து மகிழ்ச்சியாய்வருகுவோமே.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சத்துருக்கன் மூன்று திக்கும் சென்று அரசர்களை வெற்றிபெற்று அஸ்வத்தை திருப்பிக்கொண்டு கீழ்த் திசை நோக்கி வருகின்றபோது வால்மீகர் இனி நடக்கப்போகிற சேதிகளையறிந்து வருணனோடு யாகஞ்செய்ய பாதாளலோகம் போவதற்கு சீதையம்மனை விடைகேட்கிறவிதம் காண்க.

## வால்மீகர் விருத்தம்

அன்னையேகேளாய்நானும் அறிவிப்பேன்விவரமாக
மன்னியேவருணன்தானும் மகிழ்ச்சியாய்யாகஞ்செய்ய
என்னையுமழைப்பதாலே ஏகினான்அங்குசென்று
பன்னியேமுடித்துயாகம் பக்ஷமாய்வருகின்றேனே.

## சீதை தரு

ஐயோநான்என்னசெய்வேன் முனிநாதா
ஐயோநான்என்னசெய்வேன்
தையலாள்எனக்குதுணை தார்வனம்தன்னில்காணேன்
சுருள் தவிக்குறேன்என்மனம் தவமுனிவோரே
அவதிக்கென்செய்வேன் அருளுவீர்நீரே அ

## வால்மீகர் தரு

தொல்லைநீபடவும்வேண்டாமே அம்மம்மாதாயே
தொல்லைநீபடவும்வேண்டாமே
வல்லமையில்மிகுந்த மைந்தருமக்கிருக்க
சுருள் வாடவேண்டாம்மனம் வஞ்சியேநீரும்
கூடியேசீக்கிரம் வருகிறேன்பாரும் தொ

## சீதை தரு

சீக்கிரம்சென்றுமேவருகுவீர் யாகம்முடித்து
சீக்கிரம்சென்றுமேவருகுவீர்
பாக்கியமானஎந்தன் பாலர்களையேநம்பி
சுருள் பாவையாள்எந்தனை தனித்துமேவிட்டு
ஆபத்துநேர்ந்திட பார்க்காதிர்கெட்டு சீக்

## வால்மீகர் தரு

ஆபத்துஉனக்குநோராதே அம்மம்மாதாயே
ஆபத்துஉனக்குநேராதே
ஆபத்துநேராதம்மா அருமைமைந்தர்களோடு
சுருள் அடவியில்வீற்றிரு அன்னையேநீரும்
திடமுடன்வருகிறேன் சீக்கிரம்பாரும் ஆ

## பொது வசனம்

அதோதெப்படியென்றால் வால்மீகர் வருணன் யாகம் முடிக்க பாதாளலோகம் போனபிறகு குசலவர் சீதையிடம் விடைபெற்று கள் வேட்டையாட தாயாரை உத்தரவு கேட்பது.

## குசலவன் விருத்தம்

என்னிடஅம்மாதாயே இன்றையநாளில்தானும்
பன்னியதனுர்வேதத்தின் பரிக்ஷைகளறியவேண்டி

மன்னியேவனத்தில்வேட்டை மைந்தரும்ஆடிவாரோம்
அன்புடன்விடையளிப்பாய் அடிதனில்போற்றிசெய்தோம்.

சீதை தரு

அப்பாமகனே இதுசரியா அய்யர்
இல்லாதவேளையில்நெறியா
கப்பியேசூழ்ந்திடுங் கானகந்தன்னிலே
செப்பினீர்வேட்டைக்கு சிறுவரேபோகாதே அ

குசலவர் தரு

தனுர்வேதத்தின்பரிக்ஷைகளறியவே நாங்கள்
சாஸ்திரமுறைகளைதெரியவே
வனந்தனில்சென்று வேட்டைகளாடியே
க்ஷணத்தினில்வருகிறோம் தவறுமல்நாடியே த

சீதை தரு

எப்படிதுணிந்துமேபாலரே காட்டில்
வேட்டையாடசிலரே
ஒப்பியேஅனுப்புவேன் உங்களைதனித்துமே
செப்புவதழகல்ல செல்லாதீர்துணிந்துமே எ

குசலவர் தரு

அன்னையேவிசனங்கொள்ளாதே உனக்கு
ஆபத்துநேராதுவிள்ளாதே
உன்னிதகானிலே உலாவியேவேட்டையும்
சென்றுஆடிவாரோம் சிறுவர்கள்காட்டையும் அ

சீதை கவி

சுந்தரந்தனில்மிகுந்த சிறுவரேசொல்லக்கேளீர்
சிந்தையும்மகிழ்ச்சிகொண்டேன் சீக்கிரம்சென்றுநீங்கள்
விந்தையாய்கானகத்தில் வேட்டைகளாடி இன்று
மைந்தரேவருகுவீர் மனமதுமகிழ்ச்சியாக.

குசலவன் தரு

வேட்டையாடுவோம் வருகுவாய்லவனே தம்பி
வேட்டையாடுவோம்
வேட்டையாடுவோம்இந்தக் காட்டுக்குள்ளேபுகுந்து
வாட்டமாகவேஓடும் காட்டுமிருகந்தன்னை
சுருள் ஓடுதுபாராய் மானதுபன்றி
வாடுதுசென்னாய் வழியினில்தோன்றி வே

### குசலவன் தரு

அண்ணாவே இதோபாருமே யானைக்கூட்டத்தை
அண்ணாவே இதோபாருமே
அண்ணாவே இதோபாரும் குண்ணாதசிங்கம்தன்னை
வண்மையுள்ளவனத்தில் வருகுதுவேகமாய்

சருள் வாட்டுவேன்பாணத்தால் மிருகங்கள்தன்னை
நாட்டமாய்சென்று நமனைபோல்முன்னே அ

### குசலவன் விருத்தம்

தொல்புவியோர்கள்மெச்சும் சுந்தரதம்பிகேளாய்
வல்லமைமிருகம்தன்னை வேட்டைகளாடிகொண்டோம்
நல்லதோர்கனிவர்க்கம் நான்சென்றுபறித்துவாறேன்
செல்லுவாய்தாயிடத்தில் சிக்கிரமாகநீயும்.

### பொது வசனம்

குசலவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு லவன் வருகின்றபோது ஸ்ரீராமர்விட்ட அஸ்வமேதக் குதிரையானது வனத்தில் வருவதை லவன்கண்டு குதிரையின் நெற்றியிலிருக்கிற பட்டையத்தை வாசித்துப் பார்ப்பது.

### லவன் வசனம்

சூரியவம்சத்து ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவானவர் ஆயிரத்தெட்டண்டம் இருநூற்றிருபத்திநாலு புவனமும், சத்தசாகரமும் ஈரேழுபதினாலு லோகமும், ஏகசக்ரேஸ்வானாக ஆண்டுக்கொண்டிருந்த மகாராஜாதி ராஜனாகிய இராவணேஸ்வரனை செயித்த வீராதி வீரனாகிய ஸ்ரீராமபிரான் விட்ட குதிரை. இந்தக் குதிரை பின்பின் சத்துருபயங்கரன் தனுர்வேத சாஸ்திர ரணரங்கசூரனான சத்துருக்கன் வருகிறான். அந்த சத்துருக்கனை செயிக்க தகுந்த சாமர்த்தியமிருந்தால் குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தத்திற்கு வரலாம். சாமர்த்திய மில்லாதபேர் குதிரையைக் கண்டவுடன் பூஜைகள் செய்து காணிக்கை கப்பங்களுடன் கொண்டுவந்து சத்துருக்கரை வணங்கிக் கொள்ளவேண்டும்.

### லவன் கந்தார்த்தம்

ஆரணியந்தன்னில்வேட்டை யாடிநான்வருகும்போது
திரமாய்அஸ்வம்ஒன்று திகைத்துமேமேயக்கண்டேன்
வீரனும்ஸ்ரீராமனென்று விளங்கவேபட்டையத்தில்
பேரெழுதி இருப்பதாலே,

### தரு

பிடித்துமரத்தில்கட்டினேன் அஸ்வமதை
துடிக்கக்காரத்தால்நெட்டினேன்

படிதனில்கீர்த்திபெற்ற புரவலன்என்றதாலே
கடினமாய்அவன்சமர்த்தை காணுவேன்பின்னாலே வி

சத்துருக்கன் கவி

ஆரடாசிறுவனேகேள் அஸ்வத்தைபிடித்துக்கட்டி
போராதுசெய்வதற்கு போதாதுஉந்தனாலே
தீரமாய்பேசவந்தாய் சிறுவனேயஞ்சிடாமல்
பாரெங்கும்ஜெயித்துவந்த புரவியைவிட்டிடாயே.

லவன் கந்தார்த்தம்

அமர்செய்யமுடியாதென்று அறிவிக்கும்மன்னாகேளாய்
விமலன்வந்தெதிர்த்தபோதும் விண்ணவர்எதிர்த்திட்டாலும்
நமன்பதிக்கனுப்பிவைப்பேன் நாணதற்கஞ்சிடாமல்
இமையோடிமைதட்டு முன்னே,

தரு

இந்தசேனையைகொல்லவே கரத்தில்வில்லை
எடுத்துவில்வளைத்தேன் வெல்லவே
அந்தமுள்ளமன்னரெல்லாம் அல்லோகல்லோலப்பட்டிடவும்
ஆயிரக்கணக்கானபாணம் போய்விழுந்துகெட்டிடவும் இ
ஆறுபோலவேரத்தம் மீறிடவேஎங்குமெத்த
தேருபரிசேனைகளும் துண்டுதுண்டாய்சிதறிசுத்த இ
சொல்லாமலேசேனைகளும் பல்லைகாட்டியோடிடவும்
சூழ்ந்துநாய்நரிகள் தின்றிறைச்சிதேடிடவும் இ
சுடலைபோலவேபேய்கள் குடுக்குடன்யாடிடவும்
தோத்திரஞ்செய்துசிலர் துதித்துக்கொண்டாடிடவும் இ

சத்துருக்கன் விருத்தம்

சிறுவனேயஞ்சிடாமல் சேனைகள்தனைமடித்தாய்
பொறும்பொறும்பதரிடாதே பாலனேயுன்னைப்பெற்ற
பெருமையாய்தந்தைதாய் பேரதைஇன்னதென்று
கருத்துடன்சொல்வாயானால் கடினமாய்சண்டைசெய்வோம்.

லவன் விருத்தம்

மன்னனேசொல்லக்கேளாய் மாதாவின்பேரேசீதை
வண்ணமாய்எங்களையர் வால்மீகரிஷியேயாகும்
கன்னவில்மதனைபோன்ற குசலவன்தமையன்பேரு
என்பேர்லவனேயாகும் எதிர்த்துமேசண்டைசெய்வாய்.

சத்துருக்கன் தரு

என்னடாரிஷியின்மைந்தனே வாதுபேசுறாய்
எந்தனைசெயித்திட உந்தனாலாகுமோவீசுறாய்

என்னிடசேனையை கொன்ருயே
எமனைப்போலெதிர் நின்ருயே
ஏதுமறியாத பாலனேநில்லு
என்னிடபரிதனை விட்டுமேசெல்லு என்

லவன் தரு

விட்டுவிடுமென் றுகட்டாயமாய் பேசுருய்தீரனே
வீரனுனல்என்னைசெயித்திட வருகுவாய்வீரனே
வீணுய்ஆண்மதங் கொள்ளாதே
வெகுண்டுசிங்கம்போல் துள்ளாதே
வெருங்களமாக்குவேன் செருக்களமெல்லாம்
திருக்குகள்பேசியே முருக்காதேமுன்னே விட்

சத்துருக்கன் தரு

ஏளினமாகவேஎந்தனை பேசுருய்பாலனே
எடுத்தேன்பார்வில்லை இப்புவிநடுங்கவேசீலனே
ஏனோஎன்னே டெதிர்த்தாயே
என்கைபாணத்தால் துடித்தாயே
இனிமேலேவிடுவேனே எங்கேநீசென்ருலும்
கணைகளைபூட்டியே வாட்டுவேன்நின்ருலும் ஏளி

லவன் தரு

கட்டுவேனென்றெனை கிட்டவேசெருக்கிஞய்ராஜனே
கரிபரிசேனையைநொறுக்கியே போடுவேன்ராஜனே
காண்டீபங்கைதனில் எடுத்தேனே
கணைகளைபூட்டியே தொடுத்தேனே
தாண்டவன் திரிபுரத்தை
தகனம்செய் ததைப்போல
தத்தளிக்க எத்திசையும்
அர்த்தசந்திர பாணம்விட்டேன் கட்

சத்துருக்கன் கந்தார்த்தம்

அர்த்தசந்தரபாணம்விட்டு அதஞ்செய்தாய்சேனைதன்னை
சுத்தமாய்உன்னைப்பார்த்தால் சுந்தரராமரைப்போல்
மெத்தவேயிருப்பதாலே மனம்வல்லையுன்னைக்கொல்ல
சித்தனைப் போலவந்த,

தரு

சிறுவனேயுன்னைகட்டினேன் ரதத்தில்வைத்து
தீரமாய்ரதமோட்டினேன்

அருந்தவமுனிவர்கள் ஆகாளந்தனைநாடி
பெருஞ்சண்டைசெய்தாலும் போகேன்சொல்லாமல்சாடி

## லவன் புலம்பல் தரு

என்னநான்செய்வேனையோ எந்தனைபிடித்துக்கட்டி
இழுத்துக்கொண்டுபோறாரே தெய்வமே

அன்னைசீதையிடத்தில் யார்போய்சேதிசொல்வார்
ஐயோநான்என்னசெய்வேன் தெய்வமே

சேனைகளைகூட்டிவந்து சிறுவன்யெனைபிடித்து
சின்னபின்னஞ்செய்கிறார் தெய்வமே

கானகத்தில்வேட்டையாட சென்றிட்டஎன்தமையன்
கண்டால்விடமாட்டாரே தெய்வமே

## போது வசனம்

இவ்விதமாகத்தானே சத்துருக்கன் லவனைப்பிடித்து கட்டிப் போகின்றசேதியை வனப்பெண்கள் சீதைக்கு தெரியப்படுத்துவது.

## வனப்பெண்கள் விருத்தம்

சுந்தரவதனமுள்ள சீதாங்கனியேகேளாய்
அந்தமாய்புரவியொன்றை அடவியில்மேயக்கண்ட
விந்தைசேர்லவன்பிடித்து விளையாடிஇருந்தபோது
சிந்தையுங்கலங்கமன்னன் சிறுவனைகட்டிச்சென்றார்.

## வசனம்

ஆனால் கேளும் தாயே! லனுனவன் காட்டில் வேட்டையாடி திரும்பி வருகின்றபோது வனத்தில் ஓர் அஸ்வமேதக்குதிரை வந்தது அந்த குதிரையோடு விளையாடிக்கொண்டிருந்த லவனை ஓர் ராஜனுனவன் பிடித்து ரதக்கொடி கம்பத்தில் கட்டிக்கொண்டு போய்விட்டார்கள் தாயே சீதா.

## சீதை புலம்பல் தரு

அப்பாலவகுமரா எப்படிதுணிவேனடா
ஆசையுள்ளகண்மணியே பாலா

செப்பரியஅயோத்திநகர் சீமையையாளுவாயென்று
சிந்தையில்நினைத்தேனடா பாலா

அண்ணனைவிட்டுநீயும் அடவியிலேதனித்து
அஸ்வத்தைதபிடிக்கலாமோ பாலா

குண்ணவேளதிரிகையில் கண்மணியேநீயும்சிக்கி
கதறியழுதாயோடா பாலா

அ

லவன் கவி

அம்மணிதாயேகேளாய் அழுதிடவேண்டாமிப்போ
செம்மையாய்வேட்டையாடி சிறுவனும்யோடிவந்தேன்
தம்பிலவனைமுன்னே தனித்துமேஅனுப்பிவைத்தேன்
வம்பதுநேர்ந்ததென்ன வருத்துரைசெய்குவாயே.

சீதை கவி

அடர்வனந்தன்னில்வந்த அஸ்வத்தைலவனுங்கட்ட
தொடர்ந்துமேசேனையெல்லாம் சூழ்ந்துமேகும்பலாக
பிடித்துமேலவனைதேரிற் பிகிந்துமேகட்டிக்கொண்டு
முடுக்குடன்நடந்திட்டாராம் மங்கையாள்என்னசெய்வேன்.

குசலவன் தரு

அப்படியவர்செய்யலாகுமா எந்தன்
தம்பியேகட்டவும்போகுமா
இப்பெரும்உலகத்தில் எந்தமன்னரானாலும்
தப்பாமல்கொல்லுவேன் இப்பவேவிடைதாரும் அ

சீதை தரு

என்னநான்செய்குவேன்பர்லா மனம்
ஏங்கிதவிக்குதேசீலா
பன்னிடும்சேனைகள் படைத்துணையில்லையே
வின்னங்கள்நேருமே விடைதந்தால்தொல்லையே எ

குசலவன் தரு

தொல்லைகள்நேருது தாயே இப்போ
துன்பங்கள்கொள்ளாதேநீயே
கொல்லுவேன்தேவர்கள் சூரர்கள்எதிர்த்தாலும்
வல்லவனைமீட்டு வருகுவேன்பகைத்தாலும் தொ

சீதை விருத்தம்

அப்பனேமகனேகேளாய் ஆர்உன்னைஇன்றுநாளில்
செப்புவேன்தேவர்மூவர் தானவர்எதிர்த்திட்டாலும்
தப்பாமல்கொல்வதற்கு தந்திட்டேன்கோதண்டந்தான்
இப்பவேசமர்புரிந்து லவன்தன்னைமீட்டுவாராய்.

குசலவன் தரு

விடைபெற்றுகுசலவராஜன் அதி
வேகமாயோடிவாரானேரோஷன்
பிடிபடாரணசிங்கம்போல
புவனங்கிடுகிடெனநடந்துமேமேலே

காத்தில்கோதண்டமதை தாங்கி நல்ல
காகுத்தன்போலவேவாரானேயோங்கி
திரமுள்ளதேவரெதிர்த்தாலும் அவர்களை
தீரமாய்கொல்லுவேன் இன்றையநாளும்

## குசலவன் சிந்து

கண்டான்சேனைகளை குசலவன்
கண்களிரண்டுஞ்சிவந்து பொறியெழும்ப
கொண்டான்காத்தில்வில்லை மிக்க
குண்டலத்துமன்னரெல்லாங் கண்டுவொடுங்க
தொடுத்தான்பாணமதை சரசரென்று
தொல்லைபுவனமெல்லாம் அல்லலடைய
அடித்தான்சேனைகளை சின்னபின்னமாய்
ஆறுபோலவேரத்தம் மீறியோடவே
துடித்தான்கோபமுடன் யூகந்தன்னை
சுக்கல்சுக்கலாகவே தானுடைத்து கண்

## சத்துருக்கன் கவி

ஆரடாசிறுவனேநீ அழியாதசேனைதன்னை
மீறியேபாணத்தாலே மடித்துமேபோட்டாயெல்லாம்
சீரடாயுந்தனிட தெளிவுள்ள தந்தைதாய்பேர்
கூறடாஎந்தனுக்கு கொஞ்சமும்பிசகில்லாமல்.

## குசலவன் கவி

பேரதைகேட்கவந்த பெருமையில்மிகுந்தமன்னா
தீரமாயுரைப்பேனெந்தன் தாய்பேர்சீதையம்மாள்
வீரமானங்களையர் வால்மீகரிஷியேயாகும்
கூறுவேன்தம்பிலவன் குசலவன்எந்தன்பேரே.

## சத்துருக்கன் தரு

சண்டைகள்நமக்குவேண்டாம்பாலா நில்லுமே
சரசமானமொழிபேசியேநாமும் செல்லுவோம்
சரசரவென்று கணைபூட்டாதே
சாதிகுலத்தைப்பற்றி புகட்டாதே
சண்டைசெய்ய வல்லையிப்போ
ஒண்டியாக யுந்தனிடம்
சத்துருக்கன் என்றுசொன்னால்
எத்திசையும் தானடங்கும்

## குசலவன் தரு

சத்துருக்கராஜனேபுத்திகள் சொன்னாய்நில்லடா
தம்பியைபிடித்துக்கட்டி ஏன்வந்தாய்மல்லடா
தனுவதைதகைதனி லெடுத்தேனே
தாவியேசிலையதை வளைத்தேனே
தடைபடா பாணமதை
சரமாறி விட்டேன்
பிடிபடா சேனைகளை
நொடிக்குள்ளே மடித்தேன் சத்

## சத்துருக்கன் தரு

சின்னபையலென்றுஇத்தனை நேரம்பொறுத்தனே
சேனைகள்தன்னைஏனோமடித்தாய் வெறுத்தனே
சிலையதைதகைதனில் எடுத்தேனே
சீறிடும்பாணத்தை தொடுத்தேனே
செருக்களம் தன்னையெல்லாம்
வெருங்களமாக்குவேன்
சிறுவனே யுனைவிடேன்
பெருமைகள் பேசிடாதே சின்

## குசலவன் தரு

அன்னையாள்கொடுத்த சத்திவேலைகையில்எடுத்தேனே
அதிவிதமாகவேவில்லில் பாணம்தொடுத்தேனே
ஆலகாலம் போல்சீரியே
அக்கினிபொறி பரக்கமீறியே
அண்டபுவன மெல்லாம்
எண்டிசையுந் தானடுங்க
அடங்காத உக்ரவேலால்
அரசனைதான் மடித்தேன் அன்

## சேனாதிபதி பொது விருத்தம்

ஐயையோஎன்னசெய்வோம் அண்ணலேராமச்சந்திரா
செய்யாழிகரமேந்தும் சீதாஉம்மைப்போல
துய்யவேஇரண்டுபாலர் தண்டகாரண்யந்தன்னில்
பையவேசத்துருக்கனை போர்செய்துமடித்திட்டாரே.

## ஸ்ரீராமர் விருத்தம்

தம்பிலட்சுமணாகேளாய் தனையர்கள்என்னைப்போல
வெம்பியேவால்மீகர் வனந்தனில்இருப்பதாலே

நம்பினேன்மைந்தரென்று நற்பரிசேனையோடு
கும்பலாய்சேர்ந்துநீங்கள் குழந்தையைக்கொண்டுவாரும்.

லட்சுமணர் கவி

அங்கதனேயனுமந்தா அதிபலமன்னுகேளீர்
செங்கண்மால்வாக்கியம்போல் திரண்டதோர்சேனையோடு
தங்கியவால்மீகர் தண்டகாவனமேசென்று
மங்களமாயிரண்டு மைந்தரைவெற்றிகொள்வோம்.

அனுமார் தரு

சந்தோஷம்மிகக்கொண்டேன் சுந்தரபெருமாளே
சிந்தைமகிழ்ச்சியுடன் வருவீரே
விந்தையுள்ளாதத்தி லேறுவீரே சந்

லட்சுமணர் தரு

தேரினில்ஏறினேம் தீரர்கள் அனைவரும்
சீக்கிரம்ரதத்தையோட்டும் அனுமானே
செல்லுவோம்ரணக்களம் அனுமானே தே

அனுமார் தரு

அதிரவேபூமியும் அகிலத்தோர்திடுக்கிட
அதிவேகமாய்புரவி தட்டினேனே
அயோத்திநகர்விட்டு கிட்டினேமே அ

லட்சுமணர் தரு

ஐயையோஎன்செய்வேன் அனுமந்தாபாருமே
பெய்யுதேரத்தமழை வெள்ளமாகவே
பொல்லாதசகுனமாச்சே உள்ளம்வாடுதே அ

அனுமார் கவி

சிந்தையும்வாடவேண்டாம் சீர்பெரும்இளையகோவே
சுந்தரஸ்ரீராமச்சந்திரன் செயற்படியேமுடியும்
விந்தையாய்நமதுசேனை வீரர்கள்தன்னைகூட்டி
வந்தோமேரணக்களம் வழிசகுனம்பார்க்கவேண்டாம்.

குசலவன் கவி

தம்பிலவனேகேளாய் சத்துருக்கன்தனைமடித்து
வெம்பியேயிருந்தஉந்தன் விசனத்தைதீர்த்துவைத்தேன்
நம்மோடுசண்டைசெய்ய ரணக்களம்தன்னில்மன்னர்
கும்பலாய்வந்துசேர்ந்தார் கோதண்டம்தனையெடுப்பாய்.

## லட்சுமணர் தரு

சேனைகளைக்கொன்றசிறுவர்கள் இவர்தானோ அனுமானே எந்தன்
சிந்தையும்வாடுதேமைந்தர்களைப்பார்க்க அனுமானே

சுருள் சீதையின்மைந்தர்கள் போலவேகாணுது
தீதில்லா அண்ணன் மேனிபோல்தோணுது சே

## அனுமார் தரு

அச்சுதனைப்போன்றமெச்சும்அழகுள்ள பாலனுச்சே இப்போ
அவர்கள்மீதுசண்டைஎதிர்த்துநாம்செய்தாலே தோஷமாச்சே

சுருள் அந்தரதேவர்கள் சிந்தைமகிழவே
மைந்தரைபிடித்து செல்லுவோம்புகழவே அ

## லட்சுமணர் விருத்தம்

நல்லது அனுமந்தா நவிலுவேன்கேளாயிப்போ
செல்வர்கள் இருவரிட சிந்தையும்நொந்திடாமல்
வல்லமையுள்ளவிஸ்வ ரூபமேநீயும்கொண்டு
மல்லதுசெய்திடாமல் மைந்தரைப்பிடித்துவாராய்.

## அனுமார் கந்தார்த்தம்

செருக்களம்தன்னில்வந்த சேனைகள் தனைமடித்து
வெருங்களமாக்கிவைத்த வேந்தனேகேளாயிப்போ
திருத்தமாயுங்களிட தாய்தந்தைஇன்னுரென்று
கருத்ததைநானறிய,

## தரு

கூறுவாய்பாலா விவரமாக
போரதைமேலா

வாருதிபோல்திரண்டு வந்தசேனைகள் தன்னை
தீரனேமடித்தாயே சிந்தைகலங்கமுன்னே கூ

## குசலவன் கந்தார்த்தம்

ஆரடாசெங்குரங்கே அதட்டியேஎந்தனிட
போரதைகேட்கவந்தாய் போர்செய்யநீபயந்து
பாரடாஉன்னையென்கை பாணத்திற்கிறைகொடுக்க
சீரடாவில்வளைத்து,

## தரு

சுந்தரனும்வந்துகுதித்தேன் உந்தனைக்கொல்ல
தந்திரமாய்வந்துஎதிர்த்தேன்

அந்தகன்பதிக்குஇப்போ அனுப்புவேன்பாரடா
எந்தன்கைபாணத்தால் எமன்பதிசேர்ப்பேனே சுந்

### அனுமார் தரு

தண்டமானங்கொண்டெழுந்து தத்தளிக்கஎத்திசையும்
திடமுள்ளவிஸ்வரூபம் எடுத்தேனே
கண்டவர்பயந்தொடுங்க கடுங்கோபங்கொண்டுமீறி
கைதனில்கெதையதை பிடித்தேனே
மண்டலங்கிடுகிடென மலைகளைவாரிவாரி
கொண்டுவந்துசாய்த்தேனே கொடுங்கோபங்கொண்டுசீறி

குதிக்காதே வீணாய்
எதிர்க்காதே தீரம்
கதிக்காதே சாம்
தொடுக்காதே யடா தண்

### குசலவன் தரு

அண்டமுங்கிடுகிடென எண்டிசையும்தத்தளிக்க
ஆட்டியேவில்லைகையில் எடுத்தேனே
தண்டமும்திரிசூலம் தடைபடாஇடிபாணம்
சரமாரியேகணை தொடுத்தேனே
கண்டுமேதேவரெல்லாம் அண்டமதிலோடிட
காலனும்பயந்தொடுங்கி கலங்கியேவாடிட

காட்டினேனே பாணம்
பூட்டினேனே யுனை
வாட்டினேனே யடா
ஓட்டினேனே மூடா அண்

### பொது வசனம்

குசலவன் கையால் அனுமார் மூர்ச்சையடைந்து போனபிறகு லட்சுமணர் சொல்கிறவிதம் காண்க.

### லட்சுமணர் கவி

அரிகரிஎன்னசெய்வேன் அதிபலயனுமான்தானும்
நெறியுள்ளமைந்தர்கையால் நமன்பதிசேர்ந்தானையோ
பரிவுள்ளபாலர்மீது பகைத்துநான்சண்டைசெய்ய
பிரியமும்இல்லைஐயோ பரந்தாமாஎன்னசெய்வேன்.

### குசலவன் தரு

போர்செய்யவந்துமேமன்னனே நீ
புலம்பிதவிக்கிறாய்மன்னனே
பாரினில்புகழ்பெற்ற புரவலன்என்றுமே
புரவியைவிட்டீரே பேர்பெறஇன்றுமே போ

சேனைகள் தன்னையேகூட்டியே அமர்
செய்திடவந்தாயேமட்டியே

ஏனோசண்டைஇப்போ எதிர்த்துமேசெய்யாமலே
ஏதுக்குவிசனம்கொண்டாய் உய்யாமலே போ

உந்தன்முகத்தில்மீசையில்லையா கோபம்
உனக்குமேகிடையாதாசொல்லையா

சந்தேகமில்லாமல் தனுவதைகைகொண்டு
வந்திரோணக்களம் வீரரைப்போல்இன்று போ

லட்சுமணர் கவி

சொல்லுவாய்என்றுரைத்த சுந்தரமைந்தாகேளாய்
வில்லவன்என்றுவார்த்தை வீணாகபேசிடாதே
செல்வமாயுனைவளர்த்த தந்தைதாய்உந்தன்பேரும்
புல்லுவாய்எந்தனுக்கு போராதுபின்னால்செய்வோம்.

குசலவன் கவி

மன்னனேசொல்லக்கேளாய் மாதாவின்பேரேசீதை
வண்ணமாய்எங்களையர் வால்மீகரிஷியேயாகும்
கன்னல்வில்மதனைபோன்ற குசலவன்எந்தன்பேரு
என்னிடம்சண்டைசெய்ய எதிர்த்துமேவருகுவாயே.

லட்சுமணர் தரு

அருந்தவரிஷியின்மைந்தனே வாதுபேசுறாய்
ஆலகாலம்போல் சீரியே
அஸ்திரம்தனையெடுத்தேன் மீறியே
அந்தகன்பதிக்கு இப்போ
யுந்தனையனுப்பு வேனே அ

குசலவன் தரு

வில்லவன்என்றுமே வீரதீரங்கள்பேசாதே
வில்லதைகைதனி லெடுத்தேனே
வில்லில்சரங்கோடி தொடுத்தேனே
விண்டலமும் மண்டலமும்
எண்டிசையும் தானடுங்க வி

லட்சுமணர் தரு

ஏளனமாகவேஎந்தனை பேசுறாய்பையலே
இந்திரஅஸ்திரம் யெடுத்தேனே
ஏமகிரிநடுங்கவே விடுத்தேனே

எந்தனையே செயித்திடுவோர்
இந்தயுலகி லுண்டோ ஏ

குசலவன் தரு

மன்னனேநீவந்திடும் வழிதனைப்பாருமே
மண்டலமும்எண் டிசையும்நடுங்கவே
மாளாதகணைவிட்டேன் யொடுங்கவே
அன்னவனும் என்னைக்கண்டு
பின்னும்மனம் வாடுவானேன் ம

லட்சுமணர் கந்தார்த்தம்

நல்லதுபையலேயுந்தன் நியாயத்தைநிறுத்திவையும்
வில்லவன்என்றுநீயும் வீரங்கள்பேசிடாதே
கல்லைபெண்ணாகச்செய்த காகுத்தன்எனக்குத்தந்த
நல்லதோர் ஸ்ரீராமபாணம்,

தரு

நானுமேயெடுத்தேன் உந்தனைக்கொல்ல
பாணத்தைதொடுத்தேன்
வானவரும்பயங்கொண்டு மேலண்டமோடிட
வருகுதுகணைகள்பாரும் பெருமையுடனடியே
வாடாதேநீயும் ஓடாதே
தேடாதேபதி நாடாதே நா

குசலவன் கந்தார்த்தம்

மன்னன்இளையோன்விட்ட மாளாதஸ்ரீராமபாணம்
துன்னவேபட்டதாலே சோகமும்மிகவேகொண்டு
அன்னையாள்எனக்குத்தந்த அழியாதசத்திவேலை
பன்னியேதுபங்காட்டி,

தரு

பாலனும்யெடுத்தேன் மந்திரஞ்சொல்லி
சீலனும்விடுத்தேன்
ஆலகாலம்போலசீரி அக்கினிபொறிபாக்க
அண்டபுவனமெல்லாம் எண்டிசையும்தானெடுங்க
ஆனைபரிசேனையெல்லாம் அலரிமிகமடிய
அடித்தேனே வில்லை
யொடித்தேனே மடித்தேனே
நமன்பதி சேர்த்தேனே பா

### சேனாதிபதி ஸ்ரீராமருக்கு சொல்கிற விருத்தம்

அண்ணலேஸ்ரீராமச்சந்திரா அரிகரிஎன்னசெய்வோம்
எண்ணில்லாசேனையோடு எதிர்த்துமேசண்டைசெய்தோம்
குண்ணமல்குசலவர்கள் கோதண்டம்தனைவளைத்து
புண்ணியஇளையோன் தன்னை பாலரும்மடித்திட்டாரே.

### ஸ்ரீராமர் ஜம்பை தரு

என்னசெய்வேன்எதுசெய்வேன் எந்தன் தம்பிலட்சுமணனே
எந்தனையேதனிக்கவிட்டு எமன்பதிசேர்ந்தாயோடா
அதிகாயன்இந்திரசித்து அரக்கர்களை தனைமடித்தாய்
அந்ததைரியமெல்லாம் அழிந்துபோச்சுதோதம்பி

### பரதன் கவி

ஏதுக்குவிசனங்கொண்டாய் எழில்பெரும்அண்ணுகேளாய்
தோதாகநானுமிப்போ சேனைகள் தன்னைகூட்டி
வாதானகுசலவாளை வெற்றியும்மிகவேபெற்று
ஆதாரவானதம்பி அனைவரையும்எழுப்பிவாரேன்.

### ஸ்ரீராமர் வசனம்

ஆனல் கேளும்தம்பி பரதாழ்வாரே! குசலவாள்மீது யுத்தம் புரியாமல் கைப்பிடியாக பிடித்துக்கொண்டு சேனைகளை எழுப்பி சீக்கிரம் வாரும் தம்பியே.

### பரதன் தரு

அண்ணன்மொழி தன்னைகொண்டுமே பரதராஜன்
ஆனைசேனை தன்னைகூட்டியே பரதராஜன்
தண்டுசூலம்சக்ரவாளுடன் காத்திலேந்தி
தாவிவேகமாகவாரானே பரதராஜன்
சின்னபையல்குசலவர்மீது யுத்தம்செய்து
சேனைகளையெழுப்பிவருவேனே தந்தானதான அ

### பரதன் கவி

சிறுவனேயஞ்சிடாமல் சேனைகள்தன்னையெல்லாம்
பெருஞ்சண்டைமிகவேசெய்து புரவலரைமடித்துபோட்டாய்
மறுமொழியுரைக்கவேண்டாம் மகிழ்ச்சியாயுன்னைபெற்ற
கருத்துள்ளதந்தைதாய்பேர் கழறுவாய்எந்தனுக்கு.

### குசலவன் தரு

எந்தனேடுசண்டைஎதிர்த்துமேசெய்யாமல் வீரனே
எதுக்குஎன்னிடதாய்பேர்கேட்கிருய் தீரனே

உந்தன்முகத்தில் மீசையில்லையா
உரைக்கவந்தாய் வீண்சொல்லையா

வந்தவர்தனக்கு பேரை
வகுத்துநான் சொல்வேனோ

வாட்டுவேனேகணை பூட்டுவேனே
ஆட்டுவேனே யுனையோட்டுவேனே

## பரதன் தரு

என்னிட்புரவியைஎதுக்கு பிடித்துமேகட்டியே
எளினமாகவேஎதிர்த்துமே பேசுறாய்மட்டியே

சின்னஞ்சிறுவனென்று எண்ணியே
செருக்களத்தில் யோசனைபண்ணியே

மன்னவன்என்றுஎன்னை மதிக்காமல்பேசுறாய்
மனம்வல்லஉனைகொல்ல சினங்கொண்டுவீசுறாய்

## குசலவன் தரு

தேரினில்ஏறியேவீரரைப்போல் சண்டைசெய்யவே
தீரமாய்வந்தீர்வீணாய் ரணக்களம்பையவே

சிந்தைகலங்கிநீ வாடாதே
சிறுவனென்றுபயந் தோடாதே

சிங்கம்போல யான்வெகுண்டு
சிறுவனும் வந்தேனேடி

செருக்களம் தன்னிலே
பெருஞ்சண்டை செய்யவே தே

## பரதன் தரு

பெருஞ்சண்டைசெய்யவே பேசுறாய்என்னிடம்பையலே
பிடித்தேன்பிரசண்ட கோதண்டம்தன்னைகையிலே

பாணங்கள்தன்னை யெடுத்தேனே
பாராய்துபதிபங் கொடுத்தேனே

பயந்துமேபோகாதே பாலனேநில்லு
பாணத்திற்குஎதிர் பதிலுமேசொல்லு பெ

## குசலவன் கந்தார்த்தம்

வெற்றியில் மிகுத்தோனென்று வீரதீரங்கள் தன்னை
மெத்தவே வீண்பேசி மிக்கவே சமர்புரிந்தாய்
மத்தக யானைதன்னை மரித்திடும் சிம்பம்போல
சித்திரவில் வளைத்து,

## தரு

தேவரும்நடுங்கவிடுத்தேன் அமோகபாணம்
யாவரும்நடுங்கதொடுத்தேன்

காவலனேநீயும் கண்டுபயங்கொள்ளவே
காகரவென்றுபரிதேரும் நொருங்கிடவே
சிரம்வேறுகால்வேறு செய்தேன்பொடிபடவே தே

## பொது வசனம்

அகோதெப்படியென்றால் குசலவன் கைபாணத்தால் பரதன் மூர்ச்சையாகி விழுந்திட சேனாதிபதி ஸ்ரீராமருக்கு தெரிவிப்பது.

## சேனாதிபதி விருத்தம்

மன்னனேஸ்ரீராமச்சந்திரா மலரடிபோற்றிபோற்றி
இன்னிலம்மதிக்கும்சேனை எழில்பெரும்பரதன்தன்னை
கன்னல்வில்மதனைபோன்ற குசலவர்மடித்துபோட்டார்
பன்னியேசேதிகூற பயந்துமேயோடிவந்தோம்.

## ஸ்ரீராமர் புலம்பல் தரு

என்னநான்செய்வேனடா எந்தன்தம்பிபரதா
எப்படிதுணிவேனடா தம்பியே
மன்னியசேனையோடு மகிழ்ச்சியாய்நீயும்கூடி
மடிந்தாயேபாலர்கையில் தம்பியே
சின்னஞ்சிறுவரோன்று சிந்தையில்தானினைந்து
செய்யாமல்போனாயோசண்டை தம்பியே எ

## ஸ்ரீராமர் விருத்தம்

விந்தையில்மிகுந்திட்ட விபீஷணாகேளாயிப்போ
குந்தமில்லாதம்பிமார்கள் குசலவரால்மடிந்ததாலே
தந்திரசேனைபரி தண்டுதளம்தன்னைக்கூட்டி
சிந்தையும்மகிழ்ச்சியாக செல்லுவோம்ரணக்களமே.

## ஸ்ரீராமர் தரு

வெற்றியில்மிகுத்திட வீரரே
வாருங்கள்என்பின்னே தீரரே
சித்திரதந்தன்னில் ஏறுவீர்
செல்லுவோம்ரணக்களம் நாடுவீர்
கண்டோமேரணக்களம் தன்னையே
கருத்ததுவாராதே யுன்னியே
கொண்டேன்காத்தினில் வில்லையே
குசலவாள்தன்னை கொல்லவே வெ

### ஸ்ரீராமர் கவி

வில்லதைக்கையிலேந்தி வீரரைப்போலநிற்கும்
செல்வரேசொல்லக்கேளீர் சிறப்புள்ள தந்தைதாய்பேர்
புல்லுவீர்இன்னதென்று புலமதுதான்தெரிந்து
நல்லதோர்சண்டைசெய்வோம் ரணக்களம்தன்னிலிப்போ.

### குசலவன் கவி

போதைவிவரமாக பிரித்துமேகேட்டமன்னா
வீரமாயுரைப்பேன்கேளும் வால்மீகர்எங்களையர்
மாருதபுகழ்படைத்த மாதாவின்பேரேசீதை
கூறுவேன்எங்கள்பேர் குசலவாளாகுந்தானே.

### ஸ்ரீராமர் தரு

தந்தைபேர்உனக்குமேதெரியாமல் சண்டை
செய்திடவந்தாயேஅறியாமல்

எந்தன்தம்பிமார்கள் என்னதீங்குசெய்தார்
வந்தசேனைகளை வீரனேகொன்றாயே த

### குசலவன் தரு

கொன்றதால்தீங்குகள்இல்லையே நீர்
கோபித்துப்பேசுநீர்தொல்லையே

மன்னன்சத்துருக்கனும் என்தம்பிலவனை
பின்னங்கள்செய்தானே கொன்றேனேசேனையை கொ

### ஸ்ரீராமர் விருத்தம்

கொன்றேன்நான்சேனையென்று குசலனேபேசவந்தாய்
நன்றல்லஉமக்கிது நாயத்தைநிறுத்திவையும்
என்னிடசேனைகட்கு ஏமனாய்வந்தாய்நீயும்
பன்னியேசரசமொழி பேசுவோம்கிட்டிவாராய்.

### குசலவன் கந்தார்த்தம்

செருக்களம்தன்னில்சண்டை செய்திட்டமன்னரெல்லாம்
பெருமையாய்தாய்தந்தை பேர்கேட்டுமடிந்துபோனார்
சரிசரிமன்னாயுந்தன் சாமர்த்தியம்தன்னையிப்போ
கருத்தினிலறியவேண்டி,

### தரு

கையில்கோதண்டம்எடுத்தேன் உந்தனைக்கொல்ல
காலனைப்போல் வந்துஎதிர்த்தேன்

பையவேசேனைகளை ஐயமில்லாமல்கொல்ல
துய்யவேகணைகளை தீரமாய்விட்டேன்பாராய் கை

### பொது வசனம்

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் குசலவனைப் பார்த்து தன் மைந்தரென்று உள்ளத்தில் நினைத்து சண்டைசெய்ய மனமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறபோது குசலவன் அநேக பாணங்களை ராமர்பேரில்விட பாணங்கள் பகவானென்றறிந்து பாணங்கள் சரணமடையக்கண்ட குசலவன் கோபங்கொண்டு தன் தாயார் கொடுத்த சத்திவேலை விடுகிறவிதம் காண்க.

### குசலவன் கந்தார்த்தம்

எத்தனையோ பாணந்தன்னை இராமன்மேல் விட்டபோது
சுத்தியே வலம்வந்து சரணமென் றடைந்ததிப்போ
மெத்தவே இவனைக்கொல்ல மனதினில் நினைத்துயானும்
சித்திபெற தாயார்தந்த,

### தரு

சத்திவேல் கையிலெடுத்தேன் அமோகபாணம்
மெத்தவே வில்லில்தொடுத்தேன்

எத்திசையுந்தத்தளிக்க முத்துக்கடல்கொப்பளிக்க
முத்திபெறுந்தேவரெல்லாம் சித்தமிகக்கொதிக்க

மூட்டினேனே கணை
பூட்டினேனே ராமனை
வாட்டினேனே பதி
யோட்டினேனே சத்

### குசலவன் கவி

அன்புள்ள தம்பிகேளாய் அமர்செய்தாமன் தன்னை
மன்னியேமடித்தேனிப்போ மணிமுடிகவசந்தன்னை
பன்னியேதாயாருக்கு பாசமாய்காட்டவேண்டும்
இன்பமாய்எடுத்துக்கொண்டு ஏகுவோம்அநுமானோடு.

### பொது வசனம்

இந்தப்பிரகாரமாக குசலவர்கள் ஸ்ரீராமரின் முடி கவசம் இன்னும் அநேக சாமான்களை மூட்டை கட்டிக்கொண்டு அநுமார் தலையில்வைத்து சீதையிடம் சேதிசொல்லுகிற விதங்காண்க.

### குசலவன் கவி

அருமையாய்ஈன்றெடுத்த அன்னையேயுந்தனிட
திருவடிதன்னிலிப்போ சேயர்கள்போற்றிசெய்தோம்

செருக்களம்தன்னில்வந்த சேனைகள் தனைமடித்து
பெருமையாய்கொண்டுவந்தோம் பூரிப்பாய்கண்ணால்பாரும்.

## அனுமார் சீதையைக்கண்டு பணிவது

கவி

அன்னையேபோற்றிபோற்றி அகிலம்புகழ்ராமர்விட்ட
மன்னியேபுரவிதானும் வால்மீகர்வனமேவா
பன்னியேபாலர்தானும் புரவியைபிடித்துக்கட்டி
இன்னிலம்மதிக்கும்சேனை இராமரையும்மடித்தார்.

சீதை புலம்பல் தரு

தந்தையென்றுஅறியாமலே மைந்தர்களேசண்டைசெய்து
சேனைகளைகொன்றீர்களே மைந்தர்களா

இந்தபாவத்திற்கு என்னதான்செய்வேனையோ
எந்தன்மனம்வாடுதே மைந்தர்களா

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சீதையம்மன் அழுதுக்கொண்டிருக்க நாரதமுனிவருக்குத் தெரிந்து பாதாளலோகம் சென்று வால்மீகருக்கு சேதிசொல்லி இருவரும் பூலோகம்வந்து சீதையம்மனைக் கண்டு சொல்லுகிறவிதம் காண்க.

வால்மீகர் விருத்தம்

சிந்தையும்வாடவேண்டாம் சீதையம்மாகேளாய்
தந்தையென்றறியாமல் தனையர்கள்செய்தார்சண்டை
விந்தையாய்போர்க்களத்தில் விரைவுடனுமேகி
அந்தரதேவர்மெச்ச அனைவரையுமெழுப்பித்தாரேன்.

## சீதை ஸ்ரீராமர்மேல் விழுந்து புலம்புவது

ஜம்பை தரு

ஐயோநாதனென்னசெய்வேன் அழகுதிருமேனிநாதா
பையவேபாலர்கையால் ஐயோநீர்மாண்டீரோதான்
செல்வனென்றறியாமலே சிந்தையிலேநீர்நினைத்து
வல்லமையாய்சண்டைசெய்து மைந்தர்கையால்மாண்டீரோதான்

## வால்மீகர் இறந்த சேனைகளை எழுப்புவது

விருத்தம்

சித்தமுங்கலங்கிவாடி சீதையேபுலம்பவேண்டாம்
அத்தியையுரித்தணிந்த அரனிடகிருபையாலே
மெத்தவேயானுமிப்போ மிருதசஞ்சீவிதன்னால்
செத்ததோர்சேனையெல்லாம் சீக்கிரம்எழுப்பித்தந்தேன்.

ஸ்ரீராமர் விருத்தம்

அருந்தவமுனியேகேளீர் அமரர்கள் தானுமெச்ச
இருந்ததோர்சேனையெல்லாம் எழுப்பியேதந்தீரிப்போ
குருகுறைஅயோத்திசென்று கெடிபெறமுடித்துயாகம்
சிறுவர்க்குமணிமுடி சீர்பெறதரிப்போம்வாரும்.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் ஸ்ரீராமர் சேனைகளையும் தன் மைந்தர்களையும் கூட்டிக்கொண்டு அயோத்திநகரம் வந்து யாகத்தை முடிக்க சீதையை உறுதிமொழிகளைக்கேட்க கோபம் மேற்கொண்டு சீதையம்மன் பூமாதேவியை இடந்தரவேண்டுமென்று கேட்க, பூமியானது படீரென்று வெடிக்க அதிலிருந்து சகல ஆடம்பரத்துடன் பூமாதேவி வந்து சீதையை அழைத்துக்கொண்டு சென்றுவிட, ஸ்ரீராமர் மனக்கவலையாகி பூமாதேவிமேல் கோபங்கொள்ள தேவர்கள் தேருதலைசொல்லி யாகத்தை முடித்து தேவர்கள் முனிவர்கள் பூமாரிபெய்ய குசலவர்களுக்கு இளவாசுபட்டம் கொடுக்கிறவிதம் காண்க.

## குசலவர்களுக்கு மணிமுடி தரிப்பது

தரு

மணிமுடி தரித்தாரே குசலவர்க்கு
மணிமுடி தரித்தாரே

மணிமுடி தரித்தாரே மன்னர்மன்னர்கள்கூடி
மாதவமுனிவர்கள் ஆசிகள்கூறிட ம

முரசுகள்ஒலித்திட கீதங்கள்பாடிட
வரிசையாய்கணிகை மாதர்கள்நடித்திட ம

## வாழி விருத்தம்

வேதமும் மறைகள்விளங்கும் புரம்வாழி
விண்ணவர் தேவர்கள் முனிவர்கள்வாழி
சீதான் அஸ்வமேத யாகம்வாழி
சீர்மேவும் குசலவாள் செங்கோல்வாழி
நீதியுட நூலெழுதிய ஷண்முகன்வாழி
நூதனமாய்ச்சிட்ட இராஜரத்தினம்வாழி
பூதலத்தில் படித்தோர் கேட்டோர்வாழி
மலர்மகள் அச்சுக்கூடம் என்றும்வாழிவாழி.

ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும்
குசலவநாடகம் முற்றிற்று.

N56
103511

மலர்மகள்பதிப்பு

# புத்தக விளம்பரம்

இதேமாதிரி பெரிய எழுத்தில் சுத்தமாக அச்சிட்டு படங்களுடன் சேர்ந்த மலர்மகள் பதிப்புகள்:—

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பஞ்சபாண்டவர் வனவாசம் | 2 | 0 | கிருஷ்ணசுவாமி தூது | 0 | 12 |
| வைகுந்த அம்மானை | 2 | 0 | புலந்திரன் களவுமாலை | 0 | 12 |
| தருமர் அஸ்வமேதயாகம் | 2 | 0 | தேசிங்குராஜன் கதை | 0 | 8 |
| சார்தர்வேஸ் 4-பகிர் கதை; | 2 | 0 | சித்திராபுத்திரன் கதை | 0 | 12 |
| புலந்திரன் தூது | 1 | 12 | துரோபதை குறம் | 0 | 10 |
| நந்தனர் கீர்த்தனை | 1 | 8 | மின்னொளியாள் குறம் | 0 | 10 |
| மதனகாமராஜன் கதை | 1 | 8 | மதுரைவீரன் கதை | 0 | 10 |
| அபிமன்னன் சுந்தரிமாலை | 1 | 8 | கோவிலன் கதை | 0 | 12 |
| காத்தவராயசுவாமி கதை | 1 | 8 | ஆரவல்லி சூரவல்லி கதை | 0 | 12 |
| புவனேந்திரன் அம்மானை | 1 | 8 | ஏணியேற்றம் | 0 | 10 |
| கள்ளழகர் அம்மானை | 1 | 8 | கர்னமகாராஜன் சண்டை | 0 | 12 |
| குலேபகாவலி | 1 | 0 | கான்சாயபு சண்டை | 0 | 12 |
| அல்லியரசாணி மாலை | 1 | 0 | பொன்னுருவி மசக்கை | 0 | 10 |
| நளச்சக்கிரவர்த்தி கதை | 1 | 0 | மநுநீதிகாதல் | 0 | 12 |
| மயிலிராவணன் கதை | 1 | 0 | கதிரேசன் ஆனந்தக்களிப்பு | 0 | 10 |
| கருடபுராணம் | 0 | 12 | வாலிமோட்சம் | 0 | 10 |
| சதகண்டராவணன் கதை | 0 | 12 | ஸ்ரீரங்கமகத்துவம் | 0 | 12 |
| புரூரவச்சக்கிரவர்த்திகதை | 0 | 12 | ஏகாதசி மகத்துவம் | 0 | 12 |
| பஞ்சதந்திரக் கதை | 0 | 12 | தமிழறியும்பெருமாள்கதை | 0 | 10 |
| பவளக்கொடிமாலை | 0 | 12 | தெனாலிராமன் கதை | 0 | 12 |
| பாரதவிலாசம் | 0 | 12 | சிறுத்தொண்டன் கதை | 0 | 8 |
| பராங்குசதாசர் கீர்த்தனை | 0 | 12 | நல்லதங்காள் கதை | 0 | 8 |

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாசம் பிரஸ்

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.